# உள்ளக் கமலம்

## கன்னி இதழ்-1966

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக் கமலம்

திருக்கோணமலை

## இந்துக் கல்லூரி இந்து மன்றம்


அளிக்கும்

கன்னி இதழ் 1966 ❁ [illegible] ஆண்டு 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேஸ்வர விநாயகர்



**கோணேஸ்வரர் ஆலயத்தின் பழைய விக்கிரகங்களில் ஒன்று.**
*(7-ம் நூற்றாண்டு)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

போற்றியெம் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணை துணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுன் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல் சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாயெமை யுடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே.

இறைவன் அருளாலும் பெரியோர் ஆசியாலும் நீண்ட நாள் எண்ணம் இன்று நிறை வேறுகின்றது.
திருக்கோணமலை இந்துக்கல்லூரி இந்து மன்றத்தின் முதன் முயற்சி — கன்னி இதழ் — தலைப் பிள்ளை.
தலைப்பிள்ளைக்குத் தக்க வொரு நல்லபெயர் வைக்க வேண்டுமென்று ஆசைப்பட்டோம்.
குயிலின் குரல் கேட்டது

கூவாய் குயிலே கூவாய் குயிலே
கூவாய் பூங்குயிலே — வானில்
தேவாய்த் திகழ் விபுலானந் தனை யுன்
தீங்குரல் தொட்டிடவே.

திருக்கோணமலை இந்துக்கல்லூரிக்கு வித்திட்ட விபுலானந்த அடிகளாரின் நினைவு எழுந்தது.
அப் பெருமகனாரின் திருவாயினின்றும் பிறந்த சொல் முன் வந்து நின்றது,
குருவாக்கு திருவாக்கு,
'உள்ளக்கமலம்' என்று பெயர்சூட்டி மகிழ்ந்தோம்.
குருவாக்கை நிறைவேற்றுவது மாணவர்களாகிய எங்களின் கடன் என்பதை உணர்ந்தோம். உத்தமனார் வேண்டுவது உள்ளக்கமலம் என்றாரே அப்பெருமகனார். அதை நினைந்து நினைந்து எங்கள் உள்ளம் கரைந்தது அடிகளாரின் வேண்டுகோளை நிறைவேற்றுவோமாக. எங்கள் 'உள்ளக்கமலத்தை' உத்தமராகிய கோணநாயகரின் திருவடிகளுக்குத் தலை தாழ்த்திக் கை கூப்பிச் சமர்ப்பிக்கின்றோம்.

'நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

''சைவசமயம்'' என்னும் பதம் சிவத் தொடர்பு என்னும் பொருளுடையது. ''அன்பே சிவம்'' என்பது சைவக் கடலில் மூழ்கி முத்தி நெறியடைந்த பெரியார் ஒருத்தருடைய பொன் மொழியாம்.

இறைவனை வழிபடும் மிகச் சிறந்த மார்க்கம் பிறரிடத்தில் அன்பு காட்டல் வேண்டி நிற்பார்க்கு வேண்டுவன செய்தலே பிறரிடம் அன்பு காட்டுவதன் பொருளுணர்ந்த செய்கையாகும். வேண்டுவன தான் என்ன? வேண்டுபவர்கள்தான் யாவர்? இவற்றைச் செய்பவர்தான்யார்?

நாம் ஒவ்வொருத்தரும் நம்முள் தெய்வத்தைக் கொள்ளல் வேண்டும். ஆகவே நம்மை நாம் நடமாடுங் கோயில்களாக்கிக் கொள்ளல் வேண்டும். நம்மை நாம் புனிதமாக்கிக்கொண்டு பிறரிடத்திலும் இறைவனைக் காணல் வேண்டும். நாம் செய்யும் செயல்கள் அனைத்தையும் தெய்வத்திற்கு அர்ப்பணித்தல் வேண்டும்.

ஏழைகளிடத்து அன்பு காட்டி அவர் இன்னல் துடைத்தலை விட வேறு பெரும் இறை வழிபாடு ஏது? நோயாளிகளுக்குத் துணைசெய்வதை விடச் சிறந்த ஆண்டவன் பணி வேறு ஏது?

இது போன்ற அரும் பெருங் கருத்துக்களைக் கொண்ட இந்து மதத்தைச் சார்ந்த எமது ஆசிரியர் சகோதர சகோதரிகளும் மாணவ மாணவியரும் ''உள்ளக் கமலம்'' என்னும் ஆண்டிதழின் கன்னிஇதழை வெளியிட முன் வந்தமை கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். எமது கல்லூரி மாணவ மாணவியருக்கு இந்து மதக் கருத்துக்களைப் பெரியார்களிடமிருந்து பெற்றுக் கொள்ளவும், அவர்கள் (மாணவர்) தம்மால் இயன்றளவு நம் கருத்துக்களுக்குக் கட்டுரை உருவம் கொடுத்து வெளிப்படுத்தவும் இம்மலர் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமல்லவா?

இத் தருணத்தில், இப் பணியில் முன் நின்று உழைக்கும் அனைவரையும் வாழ்த்துகின்றேன். ஓங்குக அவர்கள் உழைப்பு! நிலை பெறுக இந்து மதக் கோட்பாடுகள்!

''மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்''

க. சிவபாலன்,
கல்லூரி முதல்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

இக்கன்னியிதழ் வெளிவருவதற்கு உதவிய பெரியோர்கள், வள்ளல்கள், அன்பர்கள், கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் யாவருக்கும் எங்கள் அன்பு கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


வணக்கம்!

இங்ஙனம்,

இந்து மன்றம்,
இந்துக் கல்லூரி,
திருக்கோணமலை.

செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**மாதுமையம்மாள்**
**சமேத**
**கோணேஸ்வரர்**

★

சோமாஸ் கந்தமூர்த்தம்
(7-ம் நூற்றுண்டு —
கோணேஸ்வர ஆலயத்
தின் பழைய
விக்கிரகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

இராகம்:
மோகனம்

தாளம்:
ஏகம்

வாழ்க வாழ்கவே – எங்கள்
கோணைநகர் இந்துக்கல்லூரி வாழ்கவே

1. ஆதியந்த மில்லாத ஆண்டவன் தெய்வம்
அன்னையும் பிதாவும் மொழிகள்முன்னறி தெய்வம்
எண்ணோடெழுத்ததனை ஈபவர் தெய்வம்—இனி
என்றுமவரையே பணிந்து இனிது வாழுவோம்.

2. நல்ல உள்ளம் வளர்ப்போம் உடல் உறுதி வளர்ப்போம் — கலை
கல்வி வளர்ப்போம் தூய செல்வம் வளர்ப்போம்
நல்லவரை நாடி நிதம் நல்வழிநிற்போம் – எங்கள்
நாட்டினுக்கே சேவை செய்து நாமும் வாழ்வோம்.

3. முத்தமிழும் கற்று மேலைவித்தையுங்கற்போம் — உயர்
சத்தியமும் ஐக்கியமும் வாழ்விலணைப்போம்
வித்தை தரும் கோணைநகர் இந்துக் கல்லூரியின்
உத்த மராமாசிரியர் தனைப்பணிவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " உள்ளக் கமலம் "

## வெளியீட்டு மேற்பார்வையாளர்களான ஆசிரியர்கள்.

உயர் திரு. க. சிவபாலன் B.A.Dip.in Edv.

| | | |
|---|---|---|
| சைவப்புலவர் பண்டிதர் | ,, | இ. வடிவேல். |
| | ,, | இ. கணபதிப்பிள்ளை. B.s.c. |
| | ,, | சி. புலேந்திரன். B.A. |
| | ,, | வ. தங்கராசா. |
| | ,, | இ. திருச்செல்வம். |
| கழகப் புலவர் | ,, | பெ. பொ. சிவசேகரம். |

திருமதி. இ. கந்தையா.

உயர் திரு. க. சிவப்பிரகாசம்.

## இந்து சமய மாணவ மன்ற உறுப்பினர்.

| | | |
|---|---|---|
| தலைவர்: | செல்வன் | த. சாம்பசிவம். |
| உப-தலைவர்: | ,, | அ. மாணிக்கவாசகர். |
| காரியதரிசி: | ,, | செ. நாகலிங்கம். |
| உப-காரியதரிசி: | ,, | சு. ஸ்ரீபவன். |
| பொருளாளர்: | ,, | க. தெய்வேந்திரன். |

**அங்கத்தவர்கள்:**

| | |
|---|---|
| செல்வன். | து. மகேந்திரன். |
| ,, | வே. குகதாஸ். |
| ,, | கனகரெத்தினம். |
| ,, | க. கங்காதரன். |
| ,, | சி. கிரிதரன். |
| ,, | இ. இரங்கநாதன். |
| ,, | த. மாணிக்கவாசகர். |
| ,, | ப. குகதாஸ். |
| ,, | மு. பீற்றர். |
| ,, | கோ. சுந்தரமகேசன். |
| ,, | த. நிர்மலராசன். |
| ,, | செ. குணபாலசுந்தரம். |
| ,, | அ. ஜீவஜோதி. |
| ,, | ஆ. சிவகுமார். |
| ,, | க. பாலரெத்தினம். |
| ,, | பா. மகேந்திரதாஸ். |
| ,, | செ. யோகதாஸ். |
| ,, | தே. நவரெத்தினதாஸ். |
| ,, | து. ஜெயசீலன். |
| ,, | து. நச்சினார்க்கினியன். |
| ,, | தயாபரநிதி. |
| ,, | பன்னீர்ச்செல்வன். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ ஆய்ந்தெடுத்த தீஞ்சுவைப் பொருள்களும்

✤ ஒளி மிளிரும் அலுமினியம் பாத்திரங்களும்

✤ ஆடவருக்கும் பெண்மணிகளுக்கும் அழகுக்கு

அழகூட்டும் அழகு சாதனங்களும்

திருகோணமலையில் நிறைந்த இடம்

# "ஆதித்தன் களஞ்சியம்"

115, நடுத் தெரு, திருக்கோணமலை.

உங்கள் உள்ளப் பூரிப்பே எங்கள் ஆசை

# ATHITHAN STORES

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

115, CENTRAL ROAD, TRINCOMALEE,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE

I was glad to hear that the committee of the Hindu Society of the Hindu College, Trincomalee, had decided to publish an annual magazine devoted to religious matters. There is much in the vast complex that is Hinduism which requires elucidation and study. For example, those of us who have been born into the Tamil Saivite fold are too often ignorant of the other forms of Saivism, such as Vira Saivism and Kashmir Saivism, and also of the other great sects of Hinduism such as the Vaishnavite and the Sakta. It is also desirable that students should study their religion in relation to the other great religions of the modern world, so that they could learn, in the true spirit of the Sanatana Dharma, to reverence all forms of man's approach to the source of his being.

I have much pleasure, therefore, in welcoming the first issue of the proposed magazine and in wishing it continued success.

T. Nadaraja.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

இந்துக் கல்லூரியின் கடந்த காலப் பணிகளை ஒரு கண்ணோட்டம் இடும் பொழுது இந்து மதப்பணிகளில் அது ஈடு இணையற்று விளங்குவது நாம் அறிந்ததே! இக்கல்லூரியின் இந்து மன்றத்தின் ''உள்ளக்கமலம்'' வெளியீடு மாணவரின் உள்ள எழுச்சியை உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளக்குவதுடன் எதிர்காலம் எம் நாட்டுக்கு மிகச் சிறப்பாக அமையவிருக்கின்றது என்ற உண்மையையும் வெளிப்படுத்துகின்றது.

இறைவனின் திருநாமத்தைக் கூறுவதிலும், அவன் புகழைக் கேட்பதிலும், அவன் மாண்பு மிகு திருவிளையாடல்களை அறிவதிலும், அவனுக்குப் பணி செய்வதிலும் இன்பம் காணும் திருக்கோணமலை இந்துக் கல்லூரி ஆசிரியர்களினதும் மாணவ மாணவியரினதும் முதல் முயற்சியாம் கன்னி இதழ் வெளியீட்டுச் செய்தி கேட்டு மகிழ்ச்சியடைகிறேன். எல்லாம் வல்ல கோணேசுவரப் பெருமானை மனதில் நினைந்து அவர்களின் முயற்சி திருவினையாகட்டும் என்று வாழ்த்தி, ஆண்டு தோறும் இப் பணி தொடர்ந்து நடைபெற அவன் வழி காட்டுவான் என்று வணங்கா நிற்கிறேன்.

சு. ம. மாணிக்கராசா,
திருக்கோணமலை பாராளுமன்ற உறுப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A MESSAGE

It gives me pleasure to send a few thoughts in the form of a mesage on tee occasion of the publication of a Souvenir by the Hindu Society of the Hindu College Trincomalee.

The Hindu Society cae contribute in a large measure to the progress and well being of the Hindu youths by holding meetings and organizing debates and lectures on such topics as are calculated to improve the moral tone. The youth of today are the leaders of to-morrow. Hence it is of the greatest impertance that the youth of the country should be well - disciplined and well guided. I fervently hope that the Hindu Society will so act and conduct itself as to instel these motions in the minds of its members. In an age when the pattern of life is ɔhanging repidly for the worse and matersalistic views of life are steadily gaining ground, cultural societies like this can do much to stem this dangerous tied by encouraging not only the study of the ancient books of Hindu culture but also the pursuit of those ancient and beautiful ideals which the modern age does not care to revive.

One of the things that can never be recalled is TIME. One mayregain lost health, one may re-acquire lost wealth, but one can never recall or regain lost time. It is lost for ever. Time then is most precious. Do you realize that every day, every hour, every minute we ars gradually drifting towards Death? Every minute of that precious lhing called life is never regained when it passes away. It therefore behaves us to make the best use of time. Youths should therefore remember to make the best use of their time in school. Carelessness in youth means suffering in old age. Many are they who in their old age would say "If only I can live my school days overagaln how more usefully would I live them". Repeutance always comes too late. So let each youth take heed and start early the practice and pursuit of the noble ideals of life so that when old age comes there will be no occasion for sorrow and regret. Let each youth so take care of his life that a recollection of the past will afford nothing but the highest pleasure.

V. F. GUNARATNA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி


திருகோணமலை இந்துக்கல்லூரி இந்து மன்றத்தினரின் கன்னி முயற்சியாக ''உள்ளக் கமலம்'' என்னும் ஒரு சமய இதழ் வெளிவரவிருப்பதை அறிந்து பெரு மகிழ்ச்சியடைகிறேன். இதே மன்றத்தினர் தமது இன்னொரு முயற்சியாக சென்ற ஆண்டு தொடக்கம் நடாத்தி வரும் வார இறுதி இந்து மத வகுப்பைப் பற்றியும் நான் அறிவேன்.

பாடசாலைகளிலே சமயக் கல்வி கட்டாயபாடமாக அமைந்திருந்த போதும், இவ்வகையான மன்றங்கள் தனிப்பட்ட முறையிலே செயலாற்றி மாணவர்களின் சமயக் கல்விக்கு மெருகூட்டுவது மிகவும் வரவேற்கத்தக்கதொன்றாகும். இந்த வகையில் திருகோணமலை இந்துக் கல்லூரியின் இந்து மன்றம் சிறந்த வகையில் வழிகாட்டியாக விளங்குகின்றது. இதன் பணி மேன் மேலும் சிறப்புற்று மாணவர்களின் நல்வாழ்விற்கு வழிகாட்டியாக விளங்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

கல்வி அலுவலகம்,
திருகோணமலை,
21-2-66.

வெ. சங்கரலிங்கம்,
திருகோணமலை வித்தியாதிகாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

## உயர் திரு. சுவாமி நடராஜாநந்தா அவர்கள் அருளியது

திருகோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரி மாணவர்கள் இந்து மன்றக் கன்னி இதழ் ஒன்றை வெளியிடுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். முத்தமிழ் வித்தகன் விபுலாநந்த அடிகளாரும் நானும் பல ஆண்டுகளாக இந்துக்கல்லூரியில் பணியாற்றியுள்ளோம். அப்பொழுது இவ்வூர் மாணவர்களிடையே திகழ்ந்த கலை ஆர்வத்தை நாங்கள் நன்கு அறிந்து அவர்களுக்கு அத்துறையில் ஆக்கமும் ஊக்கமுமளித்து வந்தோம். அடிகளார் காட்டிய வழியை பின்தொடர்ந்து இப்போது வெளியிடும் கன்னி மலரை நான் மனமார வாழ்த்துகின்றேன். உங்கள் முயற்சி நன்முயற்சியாகுக! இக் கன்னிமலரானது ஓர் இடையூறுமின்றிப் பூரணமாக மலர்ந்து இலக்கிய உலகத்திற்கு நறுமணமூட்ட வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

— சுவாமி நடராஜாநந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமி விபுலானந்தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமத ஆத்மநேய ஒருமைப்பாடு

வாழ்க்கையின் நேர்த்தியான தேவைகளையும் உயர்ந்த குறிக்கோளையும் அடையும் பொருட்டு ஒழுங்குபடுத்திய ஆக்க ரீதியான வாழ்க்கை முறையே சமயம். இந்து மதக் கோட்பாட்டின் படி ஒருவன் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்குவிதப் பேற்றையும் முறையாக அடையப் பெறுவானேயாகில் அவனது பிறவியின் நோக்கம் முழுமையடைந்ததாகக் கருதப்படுகிறது. அறம் பொருள், இன்பம், வீடு என்ற நான்குவிதப் புருடார்த்தங்களைச் செவ்வனே அடைவதற்கு வாழ்க்கையின் படித்தரங்கள்– பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற நான்கு விதங்களாய் வகுக்கப்பட்டுள்ளன. இதற்குச் சாதனமாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற கிரமமான பயிற்சி முறைகளுண்டு. அந்தந்த நிலைக்கேற்ப மேற்சொன்ன சாதனங்களை முறையாகப் பயின்று அதன்படி வாழ்கின்றவன் மேற்கூறிய நான்குவிதப் பேற்றையும் அடைந்தவனாகின்றான். சந்நியாசத்தில் ஆத்ம ஞான நிலையை அடைந்த ஜீவாத்மா தனது பிறப்பு, இறப்பு என்ற நீண்டகாலப் பிரயாணத்தை முடித்துச் சிவாக்கியப்பட்டு அழிவற்ற நிலையாகிய அமிர்தத்தவத்தை அடைகின்றான். இதுவே இந்துசமய தத்துவத்தின் சாராம்சமாகும்.

வாழ்க்கையின் குறிக்கோளாகிய ஆத்மஞானம் அடைந்தபின்புதான், ஒருவன் தனது வாழ்க்கையின் சகலவிதமான பிரச்சனைகளிலிருந்தும் விடுதலையடைகின்றான். அந்நிலையை அடைவதற்கு முன்பே ஒவ்வொருவர் உள்ளத்திலும் வித்தின் உருவில் அடங்கியிருக்கும் ஆத்மநேய ஒருமைப்பாட்டுணர்வைத் தட்டியெழுப்பி செயல்படுத்த முடியுமானால் தனிமனிதனிலும், உலகமனைத்திலும் தோன்றும் சகலவிதமான பிரச்சனைகளுக்கும் ஸ்திரமான தீர்வு காண முடியும். இன்றைய சகலவிதமான வீழ்ச்சிகளுக்கும், இடர்களுக்கும் ஆத்மநேய ஒருமைப்பாட்டுணர்ச்சியின்மையே மூலகாரணம். இந்த ஆத்மநேய ஒருமைப்பாட்டுணர்ச்சி நமது உள்ளத்தில் உருவகப்பட்டு செயற்படாவிட்டால் சமயம் என்பது சில கிரியைகள், சடங்குகள், கோட்பாடுகள், மற்றும் பல பிரிவினைகளுக்குமுரிய ஒரு மூடுமந்திரமாகவே இருக்கும். ஆத்மநேய ஒருமைப்பாட்டுணர்ச்சி எவ்வளவுக்கெவ்வளவு ஒவ்வொரு மூச்சிலும் செயலிலும் ஊறிநின்று அது நமது இயல்பான குணவிசேஷமாய் மாறும் பொழுதுதான் உண்மையில் சமயமானது உயிரோட்டமுள்ள ஆழ்ந்த இன்பத்திற்குரிய ஒரு மேன்மையான வாழ்வை எமக்கு அளிக்கின்றது.

எண்ணிய கருமத்தை எண்ணியவாறு செய்து முடிக்கும் உள்ளத் திட்பத்திற்குரிய ஆத்மப் பயிற்சி சிறு வயதிலிருந்தே அளிக்கவேண்டும். மாணவர் உள்ளத்தில் இளம் பராயத்திலிருந்தே ஆத்மநேய ஒருமைப்பாட்டுணர்ச்சியை வளர்த்து வந்தால் வருங்காலத்தில் உண்மை, அறிவு, ஆனந்தம் நிறைந்த உயிர்த்துடிப்புள்ள ஒரு சீரிய சமுதாயம் உருவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கல்வித் திட்டம் ஆத்ம நுண்ணுணர்வு விருத்திக்கு அனுகூலமானதாக இல்லை. நமது ஆத்மீகப் பண்பாட்டை ஆதாரமாகக் கொண்ட ஒரு இயற்கையான கல்வித்திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரச் சமயப்பற்றுள்ள யாபேரும் ஒன்று சேர்ந்து முயற்சிக்க வேண்டும். இத்தகைய சீரிய கல்வி முறையொன்று செயல்படத் தொடங்கும்பொழுது சமயத்தின் முழுவலிமையினாலுந்தப்பட்ட சுயாட்சியும், சுய அறிவும் நிறைந்த நற்பண்புமிக்க மக்களால் நமது தேசம் பெருமையும், வளமும் நிறைந்து விளங்குவதைக் கண்கூடாகக் காணலாம்.

இந்து மதத்தின் உயர்ந்த கோட்பாடுகள் இந்துக் கல்லூரியின் இதய ஸ்தானத்தில் ஊறி நின்று திசைகள் தோறும் செயல்படவேண்டுமென்று ஆசிப்பதுடன், இந்துக் கல்லூரியின் சகல விதமான மேன்மைகளுக்கும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கெங்காதரானந்தா,
சிவயோக சமாஜம்,
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE

I am glad to learn that the Ramakrishna Mission Hindu College of Trincomalee is bringing out an Annual Number at the end of this year. As one who has watched the progress of this institution from its very inceptien, and as one who has participated in many religious meetings held in its premises, I feel honoured in being invited to send a message for the proposed publication.

Education is both a science and an art. If it is the most intricate and complex of all sciences, it is also the most difficult of arts for anyone to practise. But unfortunately, many of the so-called educationists of the present day are ignorant of this fact or convenien -ly ignore it. They are influenced more by the political ideas and social theories of the time than by any noble ideals of the Great Teachers of the world. It may be that this is an inevitable handicap in the present period of transition. But the time has definitely come for some drastic reform of our educatinal it. system to suit the changed conditions and to meet the altered needs.

Your College is founded, and run for a long time, by the monks of the Order established by the Revered Swami Vivekananda. I, therefore consider that a few strikiug sentences from the Thoughts of this Great Prophet on education would serve a very useful purpose on this occasion:

> "Education is not the amount of information that is put into your brain and runs riot there, undigested all your life. We must have life-building, man-making, character making assimilatin of ideas"
>
> "We want that education by which chracter is formed strength of mind is increased, the intellect is expanded and by which one can stand on one's own feet''
>
> "It is man-making religion that we want. It is man -making theories that we want. It is man-making educaiton all round that we want''

K. RAMACHANDRA,
EDITOR
"*RELIGIOUS DIGEST*"

Jayanthipura,
Talangama,
17th November, 1965.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ வழிபாடு

ஸ்ரீ ரங்கானந்த சுவாமி (இராமகிருஷ்ண மடம், கொழும்பு.)

இராமகிருஷ்ண கழக இந்து கல்லூரியின் முதல்வரும், இந்து மன்றத் தலைவரும் எம்மிடமிருந்து ஓர் செய்தியை வேண்டினர். உங்கள் மன்றத்தின் சிறப்பு மலர் செவ்விய முறையில் மலர்ந்து யாண்டும் தெய்வீக மணத்தை மாணவர் பால் பரப்பி நிற்க இறைவன் இன்னருள் பொழிவானாக!

திருகோணமலையை நினைத்த மாத்திரத்தில் ''கனித்து இளந்துவர் வாய்க் காரிகை பாகமாக முன்கலந்த'' வரான ஸ்ரீ கோணேஸ்வர பிரானையும் அன்னவரைக் காதலித்துப் போற்றி பல பதியம் பாடிய திருஞானசம்பந்த பெருமானையும் நினையாமல் இயலாது!

குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும் கோண மா மலையமர்ந்த அம்மையப்பனை ''நிமலர்'', — நிர்மல மானவர், குற்றமற்றவர், குறையற்றவர், அதாவது நிறையுடையார் எனக் குறிப்பிடுகின்றார் தோணிபுரத்தோன்றல் பரிபூரணமான அந்நிமலர் அப்பனேயாகி அம்மையுமாக தோடுடைய செவியன் என ஒருவராக ''நீறணி திருமேனி''யில் காக்ஷியளிக்கின்றார்! அவரது திருவடிகளிலிருந்து ''நிரைகழல் அரவமும் சிலம்பொலியும்'' அலம்புகின்றது. பரிந்து நன் மனத்தால் வழிபடும் மார்க்கண்டேயரின் உயிர்மேல் வரும் கூற்றைத் திரிந்திடாவண்ணம் உதைத்து அவருக்கு அருளும் செய்த இடதுத் திருவடியிலிருந்து எழுவது சிலம்பொலி! அவ்விரு மலர் பதங்களை, போற்றி இசைப்பார்களது வாயினும் மனத்தும் மருவிநின்று, அகலா மாண்பினராயினும், தாயினும் நல்லத் தலைவராயும், நோயையும் பிணியையும் நீக்கும் பெருமாளாகவும் அமர்ந்துள்ளதை வலியுறுத்துகிறார் நம் சம்பந்தபிரான். இத் திருஞான வள்ளலைப் பற்றி சைவ சமய பாடங்களில் படிக்காத மாணவரோ பக்தரோ இலர்; எனினும் இரண்டொரு சிந்தாமணிகளை சிந்திக்கலாமன்றோ?

இக் கவுணியார் தங்குல தீபம் பிரகாசித்த காலம் ஏழாம் நூற்றாண்டின் முற்பாதி என ஆராய்ச்சியாளரது துணிபு. இவரது வாழ்நாட்கள் பதினாறு ஆண்டுகளே! பதினாறு வயதுக்குள் இப்''பிள்ளை'' பெருமானது மாண்பெறு சாதனைகளை சைவரும் தமிழரும் என்றும் மறக்க இயலாதவை. இவைகளை மாணவப்பிள்ளைகள் உற்று சற்று சிந்திக்க வேண்டியது! ஆளுடைய பிள்ளையாரின் மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி மாணப் பெரிது. திருஞான சம்பந்த பெருமான் ஆற்றிய சைவத் திருத் தொண்டின் காரணமாக நால்வரில் முதல்வராகத் திகழ்கின்றார். பிரம்ம புரத்தில் தோன்றி பிரம்மச்சாரியாக நாடெல்லாம் சுற்றி பிராமண்யத்தை எங்கும் பரப்பிய இப்பிராமணச் சிறுவர் தன் அவதார காரியம்முடிவுற்றதும் தமது பதினாறு பிராயத்தின் இறுதியில் பிரம்ம ஜோதியில் கலந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார். இவரது திருவாயில் கலந்து மலர்ந்த இறுதிமொழி உறுதி தோன்ற மிளிர்வது; நந்தி நாமம் நமச்சிவாயவெனும், சந்தையால் தமிழ் ஞான சம்பந்தன் சொல், சிந்தையால் மகிழ்ந்தேத்த வல்லாரெலாம் பந்த பாசம் அறுக்க வல்லவர்களே'' என்பதாம்! இத்தகைய ஞானச் செல்வரை பெற்ற சைவராகிய நமக்கு எத்தகைய பெருமை! மேலும், தன்னை ''சீர்த்தி நலங்கொள் கேள்வி நான் மறைஞான சம்பந்தன்'' எனவும் அறிமுகப்படுத்துகின்றார். இவர்க்கு இச் சிறுவயதிலேயே நான் மறை ஞானமும் நலங் கொள் கேள்வியும் (கல்வியும்), சீர்த்தியும் பெற்று தலையாய கவிஞருள் மிகச்சிறந்த கவிஞனாகவும், தமிழ் மறை ஓதும் வித்தகனாகவும் ஆவதற்கு கருணை பொழிந்தவர் உமையாளன்றோ! அம்மையின் திருமுலைப் பாலால் ஞான போதம் பெற்றதின் திறம், இவர் ஓதிய தமிழ்மறையை 'மனமகிழ்வோடு பயில்பவர் எழின் மலர் மகள், கலைமகள், சயமகள் இனமலி புகழ் மகள் இசைதர இருநிலனிடையினிது அமர்வர்' என்பதால் புலப்படுகின்றது!! இத்திறம் பெற்ற பிள்ளையைப் பேணுவது நம் கடமையன்றோ!

ஞானஸ்வரூபிணி, ஞான தாயினியுமான உமாதேவியாரின் ஞான அருள் பாலின் பெருமையை ஆசாரியர் ஸ்ரீ சங்கர பகவத் பாத சுவாமிகள், தமது 'ஸௌந்தர்ய லஹரி''யில் பக்தியோடும் பணிவோடும் மிக அழகாக வர்ணிக்கின்றார்: ''மலையரசன் பெண்ணே! உன்னுடைய திருமலையால் இதயத்திலிருந்து உதித்த அமிருத பிரவாகம் போலும் பெருகுகின்றது. அவ்வுரு (பால்உரு) கொண்டு வந்தாற் போலும் பெருகுகின்றது. என்று கருதுகின்றேன். ஏனெனில், கருணை உன்னால் அளிக்கப்பட்ட உன்னுடைய ''ஸ்தன்யபானத்தை'' அருந்தி திராவிடக் குழந்தை (திருஞானசம்பந்தர்) தலை சிறந்த கவிகளுக்குள் மனதைக் கவரும் கவிஞனாக ஆகிவிட்டனர் அன்றோ!'' என்று அதிசயப்படுகின்றார்.

அந்த ஸ்லோகம் பின்வருமாறு;

''தவ ஸ்தன்யம் மன்யே தரணிதர கன்யேவற்ரு தயத:

பய: பாரா வார: பரிவஹதி ஸாரஸ் வதமிவ! தயாவத்யா தத்தம் த்ரவிட சிசு – ராஸ்வாத்ய தவயத்.

கவீனும் ப்ரௌடானுமஜனி கமனீய: கவயிதா (75)

என்பதாம் இதே கருத்தை மிக்க அழகு பெற வீரை கவிராஜா பண்டிதரும்,

''தருண மதிகலை உனது சிந்தை தழைந்த பாலமுது ஊறினல்
அருண கொங்கையில் அது பெருங்கவி அலைநெடுங் கடலாகுமே
வருண நன்குறு கவுனியன் சிறுமதலை அம்புயல் பருகுயே
பொருள் நயம்பெறு கவிதையென்றொரு புனிதமாரி
பொழிந்ததே''

என்று தமிழாக்கிய 'ஸௌந்தர்ய லஹரி' பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் என்பது தாய் உவந்து அளிக்கும் உணவுப் பொருள் அது தாயின் ஸாரம். ரஸத் தன்மையுடையது. வெண்மையாகவும் இனிமையாகவும் உள்ள சத்துப்பொருள். ஞான வள்ளல் அருந்தியதும் பாலே! அப்பாலின் வெண்மை தூய்மையைக் காட்டுகின்றது, அதன் ரஸம் இனிமையானது. ஆனந்தத்தை அருளுவது. அதன் ஸத்தும் பொருள் உண்மையை விளக்குகின்றது: உண்மையும் தூய்மையும் ஆனந்தமும் கூடினால் ஞானமன்றோ! அது தந்தவள் உமையாள் எனில், கூறவும் வேண்டுமோ! ஆத்ம ஞானத்தைத் தரும் "பிரம்ம வித்யாரூபிணி" — "வித்யா உமாரூபிணி ப்ராதுரா ஸீத் ஸ்த் ரீருபா" -பிரம்மவித்யை(பரஞானம்) என்பது உமை யென்ற பராசக்தியின் ஸ்திரீ உருவத்துடன் அவதரித்தது" —என்று கேனோப நிஷத்து பறைசாட்டுகின்றது. ஆகவே பிரம்ம வித்யையே தாயாய் பாராட்டினால் அதன் பலனும் பிரம்மஞானமன்றோ! எனவே நமது சிவநேச செல்வர் சிவபோதம் கொண்டுதிரு ஞானசம்பந்தராக மிளிர்ந்தார்!

இதனால் அறியப்படுவதென்ன?" தாயினும் நல்ல தலைவர் என்று அடியார் தம் அடிபோற்றி இசைப்பார்கள் வாயினும் மனத்தும் மருவி நின்று அகலா மாண்பினர் காண்.................கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோண மாமலை யமர்ந்தாரே" என்றபடி அம்மையப்பனை வாழ்த்துவோர் வணங்குவோர், பண்புடன் பாடிப் போற்றுவோர் யாவர்க்கும் அருட்பால் கிடைக்கும். யாவரும் ஞானசம்பந்தர் ஆகலாம் என்று உறுதிப் பாடும் நம் மெய்ஞ்ஞான வேந்தரின்வாய் பாட்டில் தொனிக்கிறது! ஞான சம்பந்தம் எய்துவதே மானிட வாழ்வின் குறிக்கோள். சமயத்தின் முடிவும் அதே!

" எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்
இங்கே யென் றருளும்புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர் பிரமபுரத்துறயுஞ்
சங்கேயொத் தொளிர் மேனிச் சங்கரன் தன் தன்மைகளே "

என்பது அவரது பொன்வாக்கு- சங்கரன் தன் தன்மை "இங்கேயென்று அருள் புரிவது,'! அவ்வடியர்ர்க்கு ஆவதென்ன?

" அச்சம் இலர்பாவம் இலர் கேடும் இலரடியார்
நிச்சம் உறுநோயுமிலர் தாமுந்நின்று யூரில்
நச்சம் மிட றுடையார் நறுங் கொன்றை நயந்தாளும்
பச்சம் உடை யடிகள் திப்பாதம் பணி வாரே "

என்னும் பாசுரத்தில் விடைகள் கிடைக்கின்றன. மேலும் மேலும்இந்த சிந்தாமணியை தரித்து வாழ முயலுவது நமது இன்றைய கடமை. இறைவன் நமக்கு அருள் பாலிக்க அவனையே சிந்தை செய்வோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்ப வாழ்வு

ஸ்ரீமத் சுவாமி சச்சிதானந்தஜி

இன்ப வாழ்வே சிறந்த வாழ்வு. இன்பமாக வாழ்பவன் என்றும் இளமையோடு வாழ்வான். கவலை மிக்கவன், உள்ளம்கருகி, உடல் களைத்து, நலிந்து மெலிந்து விரைவில் முதுமை அடைவான். எனவே ஊக்கமும், ஆக்கமும் தரும் இளமையோடு வாழ இன்ப வாழ்வைப் பெறவேண்டும். இன்பம் எங்கே இருக்கிறது? உலகப் பொருட்களில் இருக்கிறதா? இல்லவே இல்லை; நாம் சந்தோஷமாக வாழ்வதற்காக உலகிற் தேடித் தேடி அலைகின்ற பணம், பதவி, மனை, மக்கள், புகழ், போகம் இவற்றில் இன்பமில்லை. இவை எல்லாம் இன்பம் தருவன போற்தோற்றி, கடைசியில் துன்பம் தருவனவே; துன்பம் கலவாத இன்பம் உலகப் பொருள்களில் இல்லை. தனித்தபேரின்பம் உள்ளத்திற்தான் உண்டு. உள்ளத்தை உற்று நோக்கினால் ஊற்றெடுக்கும் பேரின்பத்தைப்பெற்று வாழலாம்.

நாம் உலகில் வாழ்கிறோம். வாழ்வதற்கு உணவு, உடை, உறவிடம் இன்னும் பல தேவை, அற்றவை எல்லாம் வெளி உலகிற் தானே தேட வேண்டும்? அவற்றை உள்ளத்தில் தேட முடியுமா? அவை இல்லாமல் வாழ முடியுமா? என்ற பிரச்சினைகள் எழலாம். உண்மை தான். இங்கே தான் ஒருவன் உலகப் பொருளையும் தன்னையும் பிரித்துத் தனித்தனி சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் உலகில் வாழ்கிறோம்; ஆனால் நமக்குள் உலகம் வாழக்கூடாது. கப்பல் தண்ணீரில் தான் ஓடுகிறது. கப்பல் ஓடுவதற்குச் சாதகமாயிருக்கும் தண்ணீரைக் கப்பல் தனக்குள் வைத்துக் கொண்டால் இதன் நிலை என்னவாகும்? கரைசேராது கடலுக்குள் மூழ்கி அழிந்து போகுமல்லவா? எனவே தண்ணீரிற் கப்பல் இருக்கலாம். கப்பலுக்குள் தண்ணீர் இருக்கக் கூடாது. அது போலவே உலகில் வாழ்கிறோம் என்பதற்காக, வாழ்வின் தேவைக்கான பொருட்களில் எனது என்று பற்று வைத்து, அவற்றை எமக்குள்ளே புகுத்திச் சொந்தமாக்கி விடக்கூடாது. உலகப் பொருட்களில் மாத்திரமென்ன; உயிர் வாழுகின்ற உடல் அதைச் செயற்படுத்தும் மனம் இவற்றில் கூடப்பற்று வேண்டாம் எல்லாம் இறைவனின் உரிமைப்பொருள். மனம், மொழி, மெய்யாற் செய்யப்படும் செயல் கூட இறைவன் செயலே. ''ஆட்டுகின்றனன் ஆடுகின்றனம்'' அதை மறந்து நான் செய்கின்றேன் என்ற அகப்பற்றும், எனது பொருட்கள் என்ற புறப்பற்றும் வைப்பது தான் துன்ப வாழ்வைத் தருகின்றது. இன்பம் பெறப் பற்றற்று வாழும் நிலையைத்தான் பெரியோர்கள் ''தாமரை இலையில் தண்ணீர் போல வாழ்வு'' என்று கூறி உள்ளனர். தண்ணீர் தாமரை இலையில் இருக்கத்தான் இருக்கிறது; ஆனால் அதில் மற்ற இலைகளைப் போல் நீர் ஒட்டிக் கொள்வதில்லை. பட்டும் படாமல் இருப்பதை பார்க்கிறோமல்லவா! கமல நீர் போல உலகில் வாழ்ந்தாலும் உலகிற் பொருள்களில் ஒட்டிக் கொள்ளாது பிரிந்து வாழ்வதே இன்ப வாழ்வு; அதுவே தெய்வீகவாழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உலகப் பொருட்களைப் பற்றிப் பிடித்துத் துன்பமடையாதே! நான் எனது என்ற பற்றை விட்டு விடு" என்றால் மனம் கேட்கிறதா. மனமென்ற ஒன்று இருக்கும் வரை ஏதாவது ஒன்றைப் பற்றிக் கொண்டு தானே இருக்கும். எனவே தனித்து வாழ்தல் இயலாது என்கின்றது. "அப்படியாயின் பிடித்திருக்கும் பற்றை நீக்கிவிட்டு இறைவன் இணையடிகளைப் பற்று" என்று மனதுக்குச் சொல்லுவோமாயின் "இப்போது பிடித்திருப்பதை நீக்கிவிட்டு, புதிதாக இன்னொன்றை தேட முடியுமா" என்று தயங்குகிறது; என்ன விசித்திரமான மனம்! இப்போது வைத்திருக்கும் பற்றை முற்றாக விடவேண்டாம்; உலகப் பற்றைச் சிறிது தளர்த்திக் குறைத்துவிட்டு இறைவனைப் பற்றி பிடிக்க ஆரம்பித்தால் போதுமென்று மனதை நல்வழிப் படுத்துவோம். காலா காலத்தில் இறைவன் அன்பு பற்றுக் கோடாக, மற்றப் பற்றெல்லாம் மறைந்தொழியும், இதனையே வள்ளுவப் பெருந்தகை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றை
பற்றுக பற்று விடற்கு"

என்று கூறியுள்ளார்.

மனக் குரங்கை நல்வழிப் படுத்தும்போது தான் இன்பம் பெறலாம். இல்லையேற் துன்பமே. மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்; "மனதை வென்றவன் மன்னர்க்கு மன்னவன்" என்ற நன்மொழிகளைச் சிந்தித்து உணரவேண்டும். வழி காட்டி இல்லாத சிறு பிள்ளைகள்; மண்ணை அழைந்து கல்லும், கத்தியும் பிறவும் வைத்து விளையாடுவர், கல்லு குத்தும் என்றோ, கத்தி வெட்டுமென்றோ, மண் அசுத்த மென்றோ சிந்திக்கமாட்டார்கள், விளையாட்டை விடும்படி சொன்னாலும் கேட்க மாட்டார்கள். அவர்கள் காணத்தக்கதாக சுத்தமான இடத்தில், அழகான பொம்மைகளைப் போட்டால் போதும்; உடனே தாம் வைத்திருந்த கேடான பொருட்களை நீக்கிவிட்டு நல்ல பொம்மைகளோடு விளையாடி மகிழ்வர். முன் வைத்திருந்த பொருட்களைப்பற்றி கவலைப்படமாட்டார்கள்; ஏன் வலிந்து கொடுத்தாலும் வாங்கமறுப்பர். இது போன்றதே மனமும். தெரிந்தும் தெரியாமலும் துன்பம் தருவன பலவற்றை வைத்திருக்கிறது. பொய், பொறாமை, வஞ்சகம் கபடம், சுயநலம், பேராசை, ஆடம்பரம், அதிகாரம், நடிப்பு, நாத்திகம் இன்னும் எத்தனை! எத்தனையோ!! அத்தனையும் இன்னல் தருவனவாதலின் அவற்றை நீக்கி நல்லனவற்றை மனம் நாடச் செய்ய வேண்டும்; சத்தியம், அன்பு, அஹிம்சை, சேவை, கொடை என்பன இறைவன் தோற்றமாதலின் அவற்றில் பற்றுவைத்தல் இறைவனில் பற்றுவைத்ததாகும். இறைபற்று இன்பத்தைப் பாதிக்காது; ஏனெனில் இறைவன் இன்ப சொரூபமாக உள்ளேயே இருக்கிறார். உள்ளிருக்கும் ஆனந்த சொரூபமே இறைவன்; அந்த இன்பம் என்றும் நித்தியமானது. எனவே இறையன்பை இதயத்தில் நிறைத்து என்றும் இன்புற்று வாழ்வோமாக!

இன்பமே சூழ்க!

எல்லோரும் வாழ்க!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் அறியோம்
# நம்மை நாம் அறியோம்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

## குடகு

குடகு என்ற சொல்லின் முதலிற் ககர மெய்யின் மேலுள்ள உகரம் முற்றியலுகரம்; இறுதியிற் ககர மெய்யின் மேலுள்ள உகரம் குற்றியலுகரம்,

குற்றியலுகரத்துக்கு மாத்திரை அரை.
முற்றியலுகரத்துக்கு மாத்திரை ஒன்று.

முற்றியலுகரத்தைத்தனித்து உச்சரித்துக்காணலாம் குற்றியலுகரத்தை அப்படிக் காண வியலாது. குற்றியலுகரத்தை மெய்க் கண்வைத்துக் காணலாமே யன்றி மெய்யினின்றும் பிரித்துக் காண்டலோ காட்டலோ ஏலாது.

முற்றியலுகரம் முதலெழுத்து.
குற்றியலுகரம் சார்பெழுத்து.

## உயிர்

நாம் என்றோ நான் என்றோ குறிப்பிடும் உயிர் குற்றியலுகரம் போன்றது; சார்பாகிய மெய்க்கண் உயிரைக் காண்பதோ, காட்டுதலோ கூடுமன்றி மெய்யாகிய உடம்பினின்றும் வேறுபடுத்தி உயிரைக் காணுதல் காட்டுதல் இயலாது.

## உயிரின் வடிவம்

உயிரின் வடிவம் அது சார்ந்ததன் வடிவம்; பளிங்கின் வடிவம்போல.

குற்றியலுகரத்தின் வடிவம். அஃது ஏறி நிற்கும் மெய்யின் வடிவம் 'க்' என்ற மெய் வடிவம் உகரம் ஏறியதாற் சற்றே வேறுபட்டிருக்கின்றது. 'கு' வடிவம் மெய் வடிவமே. உயிர் நீங்கிய உடம்பு போன்றது 'கு' அதனால் அஃது உயிர்மெய் எனப்படும்.

## உயிர் மெய்

நமது உடம்பு உயிர் மெய். உயிர் நீங்கிய உடம்பு இயங்காது. இது இயங்கும். நம்மைக் காட்டும்படி கேட்டால் நாம் குடியிருக்கும் இந்த உயிர் மெய்யைக் காட்டுவதன்றி மெய்யினின்றும் வேறு படுத்தி நம்மைக் காட்ட வியலாது. அன்றி நம்மை நாமே காணவும் இயலாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடகு அரிது

குடகுXஅரிது — குடகரிது எனவரும். 'உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும்' என்பது நதூல் விதி. தான் ஏறியிருந்த மெய்யை விட்டு, "உக்குறள்" அஃதாவது குற்றியலுகரம் ஓடும் என்கின்றது நன்னூல் தனித்தியங்க மாட்டாத குற்றியலுகரம் எங்கே ஓடும்? தனித்து ஓட வல்லதா என்பது விசாரிக்கற்பாலது.

தென் நூலாகிய தொல்காப்பியம் எங்கே ஓடும் என்பதற்கு விளக்கம் தருகின்றது,

உயிர்வரும் குற்றியலுகரம் ஓடுதலாவது, வந்த உயிருடன் குற்றியலுகரம் கலந்து விடுதலேயாம்.

## குட'க'ரிது

குடகரிது என்பதில் ககர மெய்யின் மேலுள்ள அகரம், குற்றியலுகரங் கலந்த அகரமாம்.

'கடல்' என்ற சொல்லின் முதலிற் ககரமெய்யின் மேல்ஏறிநிற்கும் அகரத்துக்கும்,குட'க'ரிது என்பதிற் ககரத்தின் மேலேறி நிற்கும் அகரத்துக்கும் வேறுபாடு பெரிதாம். குடகரிது என்பதில் அகரம் குற்றியலுகரத்தைத் தன்னுள் அடக்கிய அகரம்.

குடகு என்பதில் இறுதிமெய்யின் மேல்ஏறி நின்ற குற்றியலுகரம், இப்பொழுது அகர உயிரை அகரத்துடன் கலந்து அகரமாய் விட்டது. முன் மெய் வண்ணமாயிருந்து, இப்பொழுது உயிர்வண்ணமாய் விட்டது. இந்நிலையிற்குற்றியலுகரத்தை உன்னைக் காட்டு என்று கேட்டால். தான் இப்பொழுது எய்தியிருக்கும் உயிர் வடிவத்தை அது காட்டும்.

குடகரிது என்பதில் அகரத்தோடு கலந்த குற்றியலுகரத்தை நீ யார் என்று கேட்டால் நான் அகரம் என்னும்.

குடகு என்பதிற் ககரத்தின் மேற்குற்றியலுகரம் இருந்த போதும் நீ யார் என்று கேட்டால் அப்படிச் சொல்லாது தான் ஏறிநின்ற மெய்யையே தான் என்று அது சொல்லும்.

குடகுஎன்பதிற் குற்றியலுகரத்துக்கு எப்படி ககரமெய் சார்போ, அப்படியே குட'க'ரிதுஎன்பதில் அகரமும் குற்றியலுகரத்துக்குச் சார்பேயாம். அது பொய்யாகிய மெய்ச்சார்பு. இது மெய்யாகிய உயிர்ச்சார்பு. முன் உடல் மயம், இப்பொழுது உயிர் மயம்.


இவ்வாறே இப்பொழுது உடல் மயமாயிருக்கும் நாம், ஒருகாலத்தில் பரமாத்மாவை எதிர்ப்படுங் காலத்தில் – பொய்யாகிய உடலை விட்டோடி, மெய்யாகிய சிவமயம் ஆவோம்.

"கண்ட இவை அல்லேன் நான்"
"காணுக் கழிபரமும் நான் அல்லேன்"

என்பது சிந்தனைச் செல்வமாகிய சிவஞான சித்தியார்.

எப்பொழுதாயினும் சார்பில் வைத்தன்றித் தனித்து,
நம்மை நாம் அறியோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோணேஸ்வர ஆலயத்தின் முழுத்தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னுபுகழ் கோணமலை

பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்கள்

கோணேசர் பெருமையும் நமது கடமையும் :

ஈழ நாட்டின் மணிவிளக்காகப் பண்படும் இன்றும் என்றும் நிலை பெற்று புகழுடன் பிரகாசிக்கிறது திருக்கோணமாமலை. இதற்கு கோணேசர் வீரக் கழல்புனைந்து, திரு நீறணிந்த திரு மேனியுடன் 'வரை கெழுமகளோர் பாகமாய்ப் புணர்ந்த' திருவடிவு காட்டி, ஈண்டு விரும்பி வீற்றிருந்தருள் புரிவதே முக்கிய காரணமாகும். இந்த உண்மையினை உலகமாதாவாகிய உமாதேவியார் ஊட்டியருளிய ஞானப்பால் உண்டு: சிவகுமாரராகமாறிய காளியர் பெருமான் தனது ஞானக் கண்ணுற் கண்டார். கண்ட இதனைப் பக்திச் சுவை ததும்பத் திருகோணமலைத் தேவாரத் திருப்பதிகத்து அழகாக அமைத்துப் பாடியுள்ளார்.

இறைவன் திருமுறைகளுள் மறைந்த பொருளாக நின்று அடியவர்களுக்கருள் புரிகின்றான். எனவே இந்தத் தேவாரத் திருப்பதிகங்களைப் பொருளுணர்ந்து மனனஞ் செய்து, ஒவ்வொரு நாளும் காலை மாலைகளிற் சிரத்தையுடன் கனிவாகப் பாடிக், கோணேசரையுங் கோணேசுவரியையும் மனக் கண்ணுற் கண்டானந்தித்து, அவர் அருள் பெற்றுய்ய வேண்டியது இந்துக்களாகிய நமது கடனாகும். நமது உறைவிடமாகிய இம் மண்ணுலகம் இப்பியினை ஒத்ததொன்று. இந்த இப்பியுள் இருக்கும் முத்துப் போன்றது நமது பொன்னிலங்கை. இந்தத் தரளத்து ஒளிபோலப் பிரகாசிக்கிறது கோணமாமலை என்னும் புண்ணியத் தலம். இங்கு குளக்கோட்டனால் அமைக்கப்பட்ட திருக் கோயிலுள் பிடியன்ன நடையுடைய பிறைநுதல் மெல்லி நல்லாளாகும் மலைமகளுடன் விரும்பி வீற்றருள் புரிந்தார் கண்ணுதற் பெருமானுர். அவரைப் புலவோர் முப்போதும் வந்து வணங்கித் திருவருள்பெற்று ஆனந்தித்தனர். இயற்கையாகவே இங்கு அமைந்துள்ள நீலத் திரைக்கடலும், குன்றமும் மகாவலிகங்கையும், இளமரக்காவும், சுனைகளும், தண் தென்றற் காற்றும், பரந்த வெளியும், நீலத் திரைக்கடலுட் தோன்றும் உதய சூரியனும் பிறவும் எல்லாம் புலவர் மனத்தைக்கொள்ளை கொண்டன. அவர் மனத்து உணர்ச்சிப் பெருக்கை உண்டாக்கின. அமுதக் கவி மழை பெய்வித்தன. இந்த மெய்ஞான மழைப் பெருக்கே திருக்கோணமலைத் தேவாரத் திருப்பதிகம்; திரிகோணசல புராணம், தக்கிணகைலாய புராணம் போல்வனவாகும். இவற்றைப் பொருள் உணர்ந்து கற்றுத்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறன் ஆய்ந்து தெளிந்து, பண்டைப் பழைய புகழினை இன்றைய விஞ்ஞான உலகுக்கேற்றமுறையில் வெளிப்படுத்தி பக்திப் பெருக்கினை நிலை நாட்ட வேண்டியது, இன்றைய கற்று வல்ல இந்துக்களின் கடமையாகும். இதைவிடப் பண்டும் இன்றும் இயற்கை நலங்கனிந்த, இனியதாகும் இத்திருப்பதிக்குச் சிவனடி மறவாது திருவைந்தெழுத்துப் பிணைபற்றித், திருநீறு பூசிக், கண்டிகை பூண்டு கோணேசர் திருவுருவைத் தியானித்தபடி திருத்தொண்டர் கூட்டம் பக்தியுடன் யாத்திரை செய்தது; செய்கிறது. இவற்றை யெல்லாம் கண்டுங் கேட்டும் இந்து இளைஞர்கள் தொன்மை மறவாது அகப் புறத் தூய்மையுடன் வெள்ளிக்கிழமை தோறும், புண்ணியக் காலங்களிலும் ஆவது பண்டைப் பழம் பெருமை வாய்ந்த, திருவருள் நிறைந்த இந்தக் கோணேசர் திருக்கோயிலுக்குச் சென்று, வந்தனை வழிபாடு செய்து நமது இந்து மரபினைப் பாதுகாத்து வளர்த்தல் வேண்டும். சிவக் கொழுந்துகளாகிய நமது இந்து இளைஞருடைய பிஞ்சு மணங்களிலே காட்சிமூலமும், செய்கைகள் மூலமும்,நூலறிவு நுண்ணறிவு மூலமும், சமயபக்தியைப் பதித்து வளர்க்க வேண்டியவர்கள் திருவருட் சக்தி நிரம்பிய நல்லாசிரியரும் மெற்றோருமன்றோ? கற்கை, கேட்கை, கோயிற் பழக்கம், கற்போரைப் பிற்காலத்துப் பெரியவர்களானதும் பூரண வாழ்வு வாழ வழி வகுக்கும் என்ற உண்மையினை இந்த உலகில்யார்தான் மறுக்க வல்லார்? கல்விகற்பதன் நோக்கம் அறம் பொருள் இன்பம் வீடடைதலன்றோ?

இலங்கை அரசாங்கம் நமது சமய குரவர்களிடம் இருந்து பாடசாலைகளைப் பொறுப் பேற்று நடத்துகின்ற இந்தக் காலத்திலே, நமது மதிப்பிற்குரிய இந்துமத நல்லாசிரியர்களே பண்டைப் பழைய காலம் போல வித்தியாகுருவாகவும், சமய குருவாகவும் விளங்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். "தான் திருந்தத் தரணிதிருந்தும்" இல்லந் திருந்த இராச்சியந் திருந்தும்" என்பனவற்றை நமது இந்து ஆசிரியர்கள் பொன்னே போற் போற்றி இந்து தருமம் வளர்க்க வேண்டிய சுதந்திர காலம் இது. இதனால் பெற்றோர் தமது அருமந்த பொருளாகிய மக்களை கோயிலுக்குள் அமைந்துள்ள சுவாமிக் கெதிரில் பூவைச் சொரிவது போலப் பாடசாலையில் ஆசிரியர் முன்னிலைக்கு, வேளைக்குத் தமது மக்களை அனுப்பிவிட்டாற் தமது கடமை நிறைவேறிவிட்டது என்று திருப்தியடையலாமா?இல்லவே இல்லை. தமது மக்களின் அறிவுவளர்ச்சியிலும், உடல் வளர்ச்சியிலுங் கரிசினையாக இருக்க வேண்டும். அவர்கள் பாடுவதையும் வாசிப்பதையும் கேட்டு இன்புற வேண்டும். இவற்றில் எல்லாம் மேலாக இந்துப் பிள்ளைகளை இந்து ஆசிரியரே கற்பிக்க வேண்டும் என்ற அரசாங்கச் சட்டம் தங்கள் பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் நடைமுறையில் இருக்கிறதா என்பதைக் கவனித்துக் கண்ணே போற் போற்றிக் காத்துக்கொள்ள வேண்டும். பிற மதத்தவர்கள் நம்மதத்தை கல்வி என்ற கருவியால் வெட்டி வீழ்த்தினார்கள் என்ற உண்மையை ஒவ்வொரு இந்துவும் உணர்ந்து தமது பிறப்புரிமையாகிய மதத்தைப் பொன்னே போற் போற்றிப் பாதுகாக்க வேண்டிய சுதந்திர காலம் இது என்பதை யார்தான் மறுக்கவல்லார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய தீர்த்தமும் வெந்நீரூற்றும் :

மன்னு புகழ் கோணமாமலையில் விருப்புடன்வந்து தீர்த்தம்ஆடினோருக்குக் கொடிய பாவங்களை நீக்கிப்பேரின்பமாகும் வீடுடகளிக்கும் பாப நாசம் என்ற புண்ணிய தீர்த்தம் இருந்தது. இந்தப் புண்ணிய தீர்த்தந் தினமும் ஆடினாலும், புண்ணிய காலங்களில் ஆடினாலும் மக்கள் புரியும் பாவங்களை நாசஞ் செய்வதால் ''பாப நாசம்'' என்ற காரணப் பெயர் உண்டாயிற்று. இந்த உண்மையினைத் திருகோணாசல புராணமுடையார்

''ஆவலுற்று வந்தாடினோர்க் கருவினை கடிந்து
மேவுதற் கரிதாகிய வீடுபே றளிக்கும்
பாவநாச மாஞ்சுனை யெனும் நாமமும் படைத்த
தேவியற் பெறுதீர்தமு முள்ளதிச்சிலம்பே''

என அழகாக எடுத்துக் கூறுகிறார்.

இதைவிடத் தென்கயிலை என இந்துக்களாற் போற்றிப் புகழப்படுகின்ற, இயற்கை நலங்கனிந்த இந்தப் புனித நகரத்துக் கன்னியாவில் அமைந்துள்ள வெந்நீரூற்றுக்களை இலங்கேசன் என்று மக்களால் மதிப்பாக அழைக்கப்பட்ட சங்கரனிடம் வாட்படை பெற்ற இராவணன் தனது தாயாரின் அந்தியேட்டிக்கிரியைகளை இயற்றுதற்கு அமைத்தருளினான் என்பர். இதில் அந்தியேட்டி புரிவதையும், நீராடுவதையும் இந்து மக்கள் இன்றும் பெரும் பேறாக மதிக்கின்றனர். உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தி அடிகளாரின் புனித அஸ்தி கூட இங்கு கரைக்கப்பட்டதை அறியாதார் யாரோ? இலங்கைக்கு வரும் யாத்திரீகர் பெரும்பாலும் இந்த வெந்நீர் ஊற்றுக்களைக்கண்டு நீராடி இன்புறுவதில் தவறுவதில்லை.

திருக்கோண மாநகரத்து ஆன்றவிந்த கொள்கைச் சான்றோர் பலர் வாழுகின்றனர்

திருக்கோணமாநகரத்துப் பெரும்பாலும் பண்டைக் கால மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்தனர். அவர்கள் தூயவர்கள். அன்பும், அறனும் உடையவர்கள், பரந்த மனப்பான்மை உடையோர், கொடையிற் சிறந்தோர். ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதித்தவர். கல்வியிற் சிறந்தோர். அழகிய தேகமும், நற்குணமும் உடையவர்கள். தங்களை ஆடையாபரணங்களால் அலங்கரிப்பதில் பெருவிருப்புடையோர். தமது புகழை நிலை நாட்டப் படாத பாடு பட்டவர். இன்பத்தை விரும்பி அனுபவித்தவர். இங்கு உறையும் முதியோரும் ஆடல் பாடல்களில் பெரு விருப்பு உடையோர். எனவே இந்த மண் உலகில் இங்குள்ள மக்களுக்கு இணையானவராக எவரும் இருந்தாரல்லர். இவர்களுடைய பழம் பெருமையைத் திரிகோணாசலபுராணமும், தட்சணகைலாயமான்மியமும் இதிகாசங்களும் போற்றிப் புகழுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கோணமா நகர் போற் தூய்மை குறிப்பரு மொழுக்க மேன்மை
ஏனுறு கல்வி மாட்சி எழில் புகழ் தருமம் இன்பம்
சேணுறு நகர்கள் தம்மில் எந்நகர் சிறந்ததென்று
காணிய எழுந்த போன்ற கடிமதிற் தோற்ற மம்மா''

என்ற பாட்டு நாம் முற் கூறியனவற்றிற்கு ஆதாரமாக இன்றும் இருக்கிறது.

இலங்கைக்கு வருகின்ற தமிழ் நாட்டுப் பேரறிஞர்கள் இங்குவந்து இத்தலத்தை வழிபடுவதிற் பெரும்பாலும் தவறுவதில்லை. இந்தப் புண்ணியத் திருநகரில் வதிவோர் விருந்தோம்பலிற் சிறந்தவர். இதனால் இங்குள்ள கல்லார்க்குஞ் சொல்லாட்சி பெரிதும் உண்டு. இங்குள்ளோரின் தாய் மொழியாகுந் தமிழ் மொழிப் பற்றினைத், தமிழ் கற்பிப்போரை அன்பொழுக ஐயா! எனவும், ஆங்கிலம் கற்பிப்போரை ''மாஸ்ரர்'' என்றும் அழைப்பதொன்றாலே அனைவரும் நன்கறிந்து கொள்ளலாம். சான்றோர் பலருக்கு உறைவிடமாகிய இந்தப் புண்ணிய பூமியை சாதி சமய பேதமின்றி யாவரும் ஒன்று கூடி வாழும் இந்த இந்து நன் நகரினை நாம் மன்னு புகழ் கோணமலை என அழைத்ததில் வியப்பென்ன இருக்கிறது? உலகின் இரண்டாவது இயற்கைத் துறைமுகப் பட்டினமாகப் பிரகாசித்த, பிரித்தானியரின் கடற்படைத் தளமாக இருந்த இந்தப் புண்ணிய பூமியின் புகழை அறியாதார் அறியாதாரே யாவர்?

உத்தம விபுலானந்தரின் உன்னதத் தொண்டு:

பிரித்தானியர் ஆட்சிக் காலத்துத் திருக்கோணமாநகரர் ஒரு சிறிய இங்கிலாந்தாக மாறத் தொடங்கியது. இங்குள்ள மக்களும் ஞானக் கண்மங்கி உலகியல் இன்பங்களில் ஈடுபட்டு வெள்ளையரைப் போல உண்ணவும், உடுக்கவும், பேசவும், பாடவும், ஆடவும், நடக்கவுந் தொடங்கினர். இத்தருணத்து இலங்கை இந்துக்களின் சீவ நாடி போன்ற, சிவனருள் நிறைந்த இப்புண்ணிய பூமிக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்ச தேவரின் திருவடித் தொண்டு பூண்டொழுகுமோர் உத்தமத் துறவியார்; உண்மை ஞானியார் கலைத்துறையிலும் அறிவியத்துறையிலும் பேராற்றல் படைத்த பெரும் பேராசிரியர் சிவனருளால் வந்துற்றனர். அவர் புகழையும் செயலையும்,

'' அறிவியற் பொருளின் இயல்பினை விளக்கும் அருந்தமிழ் கட்டுரை
வரைந்தான்

பிறமொழிப் புலவர் பாநலந் தமிழிற் பெயர்த்துளஞ் சிறந்தனன் புலமைத் திறமலிகலைதேர் மாணவர் தமக்குச் செந்தமிழ் இயல்வளந்தெரிக்கும் அறம் வளர் பணிபூண்டு அறிவினால் இன்பம் ஆர்தரச் செய்தனன் அன்றே''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''செல்வன் அண்ணுமலை நிறுவுஞ் செலுங்கலை தேர் நியமமெனத்
திகழுமெங்கள்
தில்லை நகர்க் கழகத்தும் பாங்குபெறும் தமிழ்த் தலைமைப் பண்பார்
இன்பம்
மல்கவரும் பேராசான் மன்னிய பல்கலை வளர்த்தே மகிழுந்
தோன்றல்
என்றெல்லாந் தமிழ் கூறும் நல்லுலகம் போற்றிப் புகழுகிறது.

உயர்தரத் தமிழ் நூல்களைக் கற்றுப் பண்டிதர் பரீட்சையிற் தேற வேண்டும் என்ற விருப்புடைய யாமும் கோணேசர் புண்ணிய பூமியில் அவருடன் சிறிது காலம் குரு குலத்து வாழும் பாக்கியம் பெற்றேம். இங்கு வந்துற்ற எங்கள் குருமணி ஸ்ரீ இராமகிருஷ்ண சங்கம் சார்பில் இந்துக் கல்லூரியைப் பொறுப் பேற்று நடத்திய ஆரம்பப் பொற்காலம் அது. அவரும் அவருடன் உறைந்து கற்பிப்போரும் கற்போருமாகிய நாங்களும் நல்ல உறைவிடந் தானும் இல்லாது தத்தளித்துத் தயங்கிய காலம் அது. ஆங்கில ஆசிரியருக்கு முழுச்சம்பளம் கொடுக்க வியலாது எங்கள் குருநாதன் குறைந்த அளவான அரசினர் நன்கொடையைப் பெற்றுத் தலை தடவிய காலம் அது. எங்கள் குருநாதன் அஞ்சா நெஞ்சு படைத்த ஒரு வீரத்துறவி. அவருக்கு அந்தக் காலத்து ஏற்பட்ட தொல்லைகள் அளப்பில. இராம கிருஷ்ண சங்க இலங்கைப் பாடசாலைகளின் பொது முகாமைக்காரரும், இந்துக் கல்லூரி அதிபரும், எங்கள் செந்தமிழ்ப் பெரும் பேராசிரியரும் பிரபல எழுத்தாளரும், பிரசங்கியுமாக அக்காலத்துத் தொண்டாற்றிய அவர் ''என்கடன் பணி செய்து கிடைப்பதே'' என்ற உயர்ந்த கொள்கையை உடையவர்.

புத்திக் கூர்மையுள்ள உழைப்பாளிகளாகிய பிரமச்சாரிகளில் பெரு நம்பிக்கை பூண்டவர் அப் பெரியார். ஆண்டில் இளையரானுலும், அறிவில் முதிர்ந்த இளைஞர்களை மதித்து அணைத்துத், திருத் தொண்டுக்கு ஆளாகப் பயிற்றி அருள் புரிந்தவர் அன்ஞர். அவர் அரவணைப்பாலும் பற்றற்ற பேருழைப்பாலுமே கிழக்கிலங்கை திகழுகிறது. திருகோணமலை இந்துக் கல்லூரி உன்னதமான நிலையில் நின்று நிலவுகிறது. இதனை அமைப்பதற்கு சோலைக்காடுகளில் மரம் வெட்டுவித்தும், களிநிலங்களிற் கல்லறுப்பித்தும், தச்சர் சிற்பிகளை யாழ்ப்பாணத்திலிருந்து வரவழைத்தும், பணம் திரட்டியும், பிறவாறும் அடிகளார் பகலிரவாகப் பட்ட பாட்டினை அந்தக் காலத்து அவருடன் உறைந்த நாங்களே நன்கு அறிவோம். அக்காலத்து இந்துக் கல்லூரி கற்றேர்க்கும் தவசிகளுக்கும் பெரும் பட்டம் பெற்ற பேராசிரியர்களுக்கும், நன்மாணக்கருக்கும் உறைவிடமாகி ஒரு செலுங்கலை நிலையமாகப் பிரகாசித்தது. குட்டி இங்கிலாந்தாக மாறி வந்த திருக்கோண மாநகரைத் தமிழ்ப்பண்பு நிறைந்த இந்துக் கலாசாரம் வளரும் நிலைக்களமாகப் பழையபடிமாற்றியமைத்த இந்துக் கல்லூரிப் பழைய மாணவரையும், அவர் வளர்வுறப் பணிபல புரிந்த நல்லாசிரியரையும் எங்கள் குருநாதனையும் இன்றுள்ள இந்துக் கல்லூரி தலை வணங்கி நன்றி பாராட்ட வேண்டும் என்றுல் அது மிகைபடக் கூறலாகாது. அன்றைய இந்துக்கல்லூரி வளர்ச்சியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு பொது மக்கள் அற்புதம் எய்தினர். பொருளுதவி கல்லூரி வளர்ச்சிக்கு ஆவனபுரிய ஆர்வமுடன் முன்வந்தனர். கோணேசர் திருவருள் இருந்தவாறு என்னே? பேராசிரியராகவும் மாணவராகவும் அருள் நிறைந்த திரு மனம் படைத்த எங்கள் குருமணி உணவு, உறக்கம், ஓய்வின்றி உழைத்து உழைத்துப் படிப்பித்து அறிவுச் சுடர் வளர்த்துப் பண்பாடுள்ள மக்களைத் தந்திராவிட்டால் இன்றுள்ள சிவ மணம் கமழும் திருகோணமலை ஏது? தமிழ்க் கலாசார மேது? பண்டு குளக் கோட்டன் கோணநாயகருக்குத் திருக்கோயிலை அமைத்தருளினன். இன்று அந்த அழிந்த கோயிலை உருப்படுத்திய நடமாடும் கோயில்களாம் அறிவுத் தெய்வங்களை, கொடையிற் சிறந்த வள்ளல்களை இந்துக்கல்லூரி டைத்துதவிற்று!

## எமது நல்வாழ்த்து:

இந்துக் கல்லூரி என்ற செலுங்கலை நிலையம் தமிழ்க் கலாசாரம் வளர்க்கும் பல்கலைக் கழகமாக மாறிச் சிவ மணத்தைத் தமிழ்கூறும் நல்லுலகெங்கணும் வருங்காலத்துப் பரப்புதல் வேண்டும். நாமெல்லாம் நமக்கு ஞானிகள் தந்த நல்லறிவும், ஒழுக்கப் பயிற்சியும் என்றும் தென் கயிலையில் வாழும் நமது சமூகத்தில் நின்று நிலவத் தொண்டு பல புரிதல் வேண்டும். நமது சமூகம் இந்து மதத்தை அடிப்படையாகக் கொண்ட இனிய குரு குலக் கல்வி முறையால் என்றும் உயர்ந்து ஓங்குதல் வேண்டும். நீங்களும், இன்று கோணமா நகர்ச் சமூகப் பணி புரியும் உங்கள் இந்துக் கல்லூரியும், முத்தமிழ்த் துறையில் முறை போகி உத்தமப் புலவர் பிரான் அருட்திரு விபுலானந்த அடிகளார் அடிச்சுவடுபற்றி அவர் காட்டிய சிறந்த கல்வி முறையாலும், கோணேசர் திருவருளாலும், ஈழ மாதா தூய்மை அடைய இடையறுது உழைத்து உழைத்து நல்வழி காட்ட வேண்டியவர்கள் இல்லை. இந்துக்களின் சாரத்தை உலகமெலாம் பரப்ப வேண்டிய மன்னு புகழ் கோணமாமலையில் வந்துதித்து வாழ்வாங்கு வாழுபவர்கள். நீங்கள் புரியும் தவத்தினாலும், வழங்குந் தானத்தினுலும், புரியும் யாகத்தினுலும் ஏற்படும் புண்ணிய மிகுபியால் கோணேசர் பூமியில் குளக் கோட்டனுந், தணிந்துண்ப் பூபால வன்னிமையும் அருட் திரு விபுலானந்த அடிகளாரும் மீண்டும் திரு அவதாரஞ் செய்து தொண்டு புரிவதால் உங்கள் தாய் நாடு பொன்னாட்டினுஞ் சிறந்த நன்னாடாகத் திகழுக என விபுலானந்த பரம்பரையில் உதித்த உங்கள் பழைய நற்றமிழ் ஆசிரியருள் ஒருவராகிய நாம் இந்த நல்ல தருணத்து மகிழ்வுடன் நல்வாழ்த்துக் கூறுகின்றோம். வாழ்க இந்து மன்றம், வளர்க இந்து மன்றக் கன்னி இதழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கிலங்கையின் உதய ஞாயிறு

## விபுலானந்த அடிகளாரும்—கல்விப் பணியும்

## சுவாமி நடராஜானந்தா

இன்று விபுலானந்த அடிகளாரைப்பற்றி நாம் நினைவு கூருகிறோம். அப் பெரியார் மட்டக்களப்பில் தோன்றியிராவிட்டால் கிழக்கிலங்கையின் சரித்திரப்போக்கே விபரீதமாய் இருந்திருக்கும். இன்று கல்வித்துறையிலுஞ் சரி, கலைத்துறையிலுஞ் சரி நாம் ஓரளவு முன்னேற்றப் பாதையில் செல்கின்றோமென்றால் அது அந்தப் பெரியார் தொடங்கி விட்டுச் சென்ற பெரும் பணியின் பெருபேறென்றே நாம் கூறுதல் வேண்டும். அறிவு ஆற்றல்களிற் சிறந்து விளங்கிய அடிகளார் அக்காலத்தில் அதியுயர்ந்த பதவிகள் வகித்திருக்கலாம். ஆனால் அவர் அவற்றை ஒரு பொருளாக மதிக்கவில்லை. "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே" என்பது அடிகளாரின் சித்தாந்தம். தனது சகோதர மக்கள் கல்வி வாசனையின்றி, வறுமையுற்றுப் பிணியினால் பீடிக்கப்பட்டு, தாழ்வுற்று, ஈன தசையடைந்து போய்க் கொண்டிருக்கும் பொழுது தான் மட்டும் உயர்ந்த பதவியையும், சுக போகங்களையும் அனுபவிக்க அவருடைய தூய உள்ளம் இடங்கொடுக்கவில்லை. கீழ் மாகாண மக்கள் கீழ் நோக்கிப் போய் கொண்டிருப்பதை முதன் முதலாக உணர்ந்தவர் நமது அடிகளார்தான். ஆனால் அவர் அவ்வுணர்ச்சியோடு நின்றுவிடவில்லை. அந் நிலைமை மாறுவதற்கு உயர்தரக் கல்வியே சிறந்த சாதனமெனக் கண்டு அதைச் செயல் படுத்த முயன்றார்.

1925-ம் ஆண்டு சித்திரைத் திங்களில் அடிகளார் ராமகிருஷ்ண மிஷன் கல்விப் பணியைத் திருக்கோணமலையில் ஆரம்பித்து வைத்தார். ஆங்குள்ள ஆங்கிலப் பாடசாலையாகிய இந்துக் கல்லூரியையும் கோணேஸ்வர வித்தியாலயம் என்னும் தமிழ்ப் பாடசாலையையும் கருவூலமாகக்கொண்டு அடிகளார் நிர்மாண வேலையில் ஈடுபட்டார்.

பாடசாலைகளை வளர்ப்பதற்கு இடம் வேண்டியிருந்தது. அதற்குப் பூமி வாங்குவதற்குப் பணம் தேவைப்பட்டது. இப் பூமி வாங்குவதற்கு அக் காலத்தில் Registrar பதிவதிகாரியாக இருந்த திரு. வயித்திலிங்கம் என்னும் ஒரு அன்பர் பணம் கடனாகக் கொடுக்க முன்வந்தார். முதல் வேலையாக பாடசாலைக்கருகிலுள்ள ஒரு சிறு காணித்துண்டு வாங்கப்பட்டது. பாடசாலை வேலைகளைச் சீர்படுத்துவதற்கு கல்வியில் ஆர்வமுள்ள சில இளைஞர்களின் உதவியை நாடினர். யாழ்ப்பாணத்திலிருந்து இருவரும், மட்டக்களப்பிலிருந்து மூவரும், தம்பலகாமத்திலிருந்து ஒருவரும் சுவாமிகளுக்கு உறுதுணை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாயிருக்க முன்வந்தனர். சமையல் வேலை தொடக்கம் பாடசாலைப் பாடங்கள் கற்பிப்பதீருக எல்லாப் பணிகளையும் இவர்களே செய்து வந்தனர். சட்டத்திற்கு மேலதிகமாக ஆறு ஏழு திறமைசாலிகள் அல்லும் பகலும் சலியாது கௌரவ சேவை செய்து வந்ததின் பயனுகப் பாடசாலைகள் எல்லாத் துறைகளிலும் வெகு வேகமாக முன்னேறத் தொடங்கின. பொது சனங்களின் கவனம் பாடசாலைகளின் பக்கம் திரும்ப ஆரம்பித்தது. அடுத்தபடியாக கூடிய மாணவரின் வரவைச் சமாளிப்பதற்கு கட்டிடம் தேவைப்பட்டது. அந்த நேரத்தில் தெய்வாதீனமாக தம்பலகாமத்துப் பணக்காரர் ஒருவரின் மனைவி இளம் வயதிலே மரணமானுர். அது காரணமாக அவருக்குத் தர்ம சிந்தனையுண்டாகி மனைவியின் பெயரால் ஒரு கட்டிடம் கட்டுவகற்கு வேண்டிய பணத்தைக் கொடுக்க முன்வந்தார். இவ்வாறு இடவசதிப் பிரச்சினை ஒருவாறு திர்ந்தது.

பின்னர் பாடசாலையின் தரத்தை உயர்த்துவதற்கு அரசினருக்கு அடிகளார் மனுப்பண்ணினுல் விஞ்ஞானக் கூடம் இல்லாமல் உயர்தரப் பாடசாலையாக்க முடியாதென்று பதில் வந்தது. செய்வது எது என்று திகைத்தனர் அடிகளார். அந்தச் சந்தர்ப்பத்தில் தேடிப்போன தெய்வம் தெருவில் குறுக்கிட்டது போல ஒரு சம்பவம் நிகழ்ந்தது. திருக்கோணமலையில் கொறுக்காயன் சின்னத்தம்பி என்று ஒருவரிருந்தார். அவருடைய மனைவிக்குக் கண் தெரியாது. இருவருக்கும் பிள்ளைகளுமில்லை. தான் பிரயாசைப்பட்டுத் தேடிய 10,000 ரூபாவை அங்குள்ள ஒரு கத்தோலிக்க குருவானவரிடம் நம்பிக்கைக்குக் கொடுத்துவைத்திருந்தார். திடீரென அவருக்கு வருத்தம் வந்து இறக்குந் தறுவாயிலிருந்தார். இதையறிந்த ஒரு ஆசிரியர் சின்னத்தம்பியை அணுகி அப்பணத்தை இந்துக்கல்லூரிக்குக் கொடுத்தால் அவருடைய ஞாபகார்த்தமாக ஒரு விஞ்ஞானகூடம் சுவாமிகள் அமைப்பார் என்று வாக்குப்பண்ணினுர் சின்னத்தம்பி அதற்குச் சம்மதப்பட்டார். உடனே குருவானவரை அழைப்பித்து ஒரு பெருகுதோர் முன்பாக ஓர் உடன்படிக்கை எழுதப்பட்டது. அதன் பிரகாரம் ஒரு குறிக்கப்பட்ட காலத்துக்குள் குருவானவர் ரூ. 10,000ஐயும் விபுலானந்த சுவாமிகளுக்குக் கொடுக்க வாக்களித்திருந்தார். இது நடந்து அடுத்த தினம் சின்னத்தம்பி மனச்சாந்தியுடன் பரகதியடைந்தார். இந்துக் கல்லூரிக்கு விஞ்ஞான கூடங்கிடைத்தது. அத்துடன் உயர்தரப் பாடசாலையாக அரசினர் அங்கீகாரமும் கிடைத்தது.

அந்தக் காலத்திலே திருக்கோணமலை தூரகிழக்கின் பிரதான கடற்படைத் தளமாய் விளங்கியது. ஏராளமான ஆங்கிலேயர் அங்கு வாழ்ந்து வந்தனர். ஒரு குட்டி இங்கிலாந்து என்றே கூறிவிடலாம். பல்லாண்டுகளாக இந்த அந்நியர்களோடு கூடி நெருங்கிப் பழகியதன் பயனுக ஆங்கிலக் கல்வி பயின்ற இளைஞர்கள் கண்ட நடை, உடை, பாவனை, பழக்கவழக்கமெல்லாவற்றிலும் மேனுட்டாரைப் பின்பற்றி வந்தனர். இது காரணமாக தாய்நாட்டுப்பற்று, தாய்மொழிப்பற்று, சமயப்பற்று முதலியன அருகத் தொடங்கின. இந் நிலைமையைக் கூர்ந்து அவதானித்த அடிகளார் இவற்றிற்கு எதிர்முகமான நடவடிக்கை எதுவும் எடுக்காமல உடன்பாடான வழிகளைக் கையாளத் தொடங்கினர். திரு. பெரியதம்பிப்பிள்ளை, பீதாம்பரம்பிள்ளை போன்ற தமிழ்ப் பேரறிஞர்களை பண்டிதர்களைக் கொண்டு தமிழ் இலக்கியத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையில் மாணவர்களுக்கு ஆர்வமூட்டினர். தேசிய உணர்ச்சியை உண்டாக்குவதற்குச் சுப்பிரமணிய பாரதியாரின் புத்தம் புதிய தேசிய கீதங்களைப் பற்றி அடிகளார் ஆசிரிய மாணவர்களுக்கு வாரந்தோறும் சொற்பெருக்குகள் நடாத்தி வந்தார். சுவாமி விபுலானந்தர் தமது மாணவர்கட்கு சுவாமி விவேகானந்தரின் வீர முரசம் ஒலிக்கும் சொற் பெருக்குகள் கொண்ட ஒரு நூலையும், வரகவி சுப்பிரமணிய பாரதியாரின் தேசிய கீதங்கள்கொண்ட ஒரு சிறப்பு நூலையும் பரிசாக வழங்கினர். அவர் ஈந்த நூல்களில் ஒரு பெருஞ் சக்தியே மறைமுகமாகச் செலுத்தப்பட்டது என்பதை யாரறிவார். இதுவே மாணவரிடத்து ஆர்வத்தையும், நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் ஆக்கியது என்றால் மிகையாகாது.

பல்வேறு சமய சம்பந்தமான விழாக்களின் மூலம் சமயத்துறையில் அடிகளார் உற்சாகமூட்டினர். மெல்ல மெல்ல இந்த உடன்பாட்டுமுறை சிறந்த பலனை அளிக்கத் தொடங்கிற்று.

ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்த காலத்தில் சாம்ராட்சிய தினம் [Empire Day] ஓர் விசேட இடம் பெற்றிருந்தது. கடற்படைத் தலைவர், அரசாங்க அதிபர், உயர்தர அதிகாரிகள் எல்லோரும் வெள்ளையர்களே. லண்டன் மாநகரில் எப்படிக் கொண்டாடப்படுமோ அதே முறையில் திருக்கோணமலையில் நடப்பது வழக்கம். கொடி வணக்கம் (பிரித்தானிய கொடிக்குத்தான்) பாண்டு வாத்தியம், கடற்படை, பொலிஸ், பாடசாலை மாணவர்களின் அணி வகுப்பு, விளையாட்டுப்போட்டிகள் அதில் இடம்பெறும். விளையாட்டுப் பரிசுகளை ஏதோ ஒரு ஆங்கிலப்பாடசாலையே சுவீகரித்துக்கொள்ளும். அவ்வெற்றி பெற்ற மாணவர்கள் பாண்டு வாத்திய சகிதராய் ஊர்வலஞ் சென்று மக்களின் நன்மதிப்பைப் பெறுவது வழக்கம். தாங்கள் வெற்றியீட்டுவோம் என்ற திட நம்பிக்கை பெரிய ஆங்கில பாடசாலைகளுக்கு இருந்தபடியால் அவர்கள் விளையாட்டு மைதானத்துக்கு வரும்பொழுதே பாண்டு வாத்திய சகிதமாக பட்டாளத்தவர் போன்று உடையணிந்து பவனி வருவர். இந்துக் கல்லூரி மாணவர்களின் தேசிய உணர்ச்சி எவ்வளவு வேரூன்றியிருக்கின்றது என்பதைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தை அடிகளார் பயன்படுத்திக் கொண்டார். ஆசிரியர், மாணவர்களை வரவழைத்து அவர்களுக்குப் பின் வருமாறு ஹிதோபதேசஞ் செய்தார். "நாம் இதுவரை மூன்றாந்தரமானவர்களாயிருந்து வந்தோம். இனிமேல் நாம் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். ஆசிரியரும் மாணவரும் இடையறா முயற்சி செய்து விளையாட்டுப் போட்டிகளில் பெருமளவில் பரிசுகளைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். இரண்டாவதாக நாமனைவரும் மேனாட்டாரின் உடையை அப்புறப் படுத்திவிட்டு தேசிய உடை தரித்தல் வேண்டும். அன்று மட்டும் வேஷ்டியும் பெனியனும் போதுமானது. அவை தூய வெள்ளை நிறமாக இருத்தல் வேண்டும். எல்லோருடைய நெற்றியிலும் ஆண்டார்ப் பிறை போன்ற அந்தனப் பொட்டுத் திகழ வேண்டும். ஒவ்வொருவரும் காதில் நந்தியாவட்டைப் பூ வைக்க மறந்து விடாதீர்கள். பாடசாலையிலிருந்து ஒருவர் பின் ஒருவராக அணிவகுத்து அமைதியாக மெல்ல நடந்து முற்ற வெளியை அடைய வேண்டும். விளையாட்டுப் போட்டிகளில் எத்தகைய தோல்வியோ வெற்றியோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குக்கிடைக்கினும் அதைத் தாழ்ந்த மனப்பான்மையுடன் அமைதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பிற பாடசாலை மாணவர்களின் தோல்விகள் கண்டு அவர்களை இகழ்ந்து பேசலாகாது. விழா நிர்வாகிகளின் கட்டளைகளுக்கு அமைந்து நடப்பதே சாலச் சிறந்தது. நான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டேன். இவற்றைச் செயல் படுத்துவது உங்களையும் உங்களை வழி நடத்தும் ஆசிரியர்களையும் பொறுத்தது'' என்று கூறி முடித்தார்.

சாம்ராஜ்ய தின விழா ஆரம்பமானது. பாண்ட் வாத்திய சகிதமாக கடல் பட்டாளமும் ஏனைய ஆங்கில பாடசாலைகளும் வந்து விட்டன. கடைசியாக இந்துக் கல்லூரி மாணவர்கள் வெள்ளைக் கொக்குகள் பவனி வருவது போல வந்து அரங்கை அடைந்தனர். வேடிக்கை பார்க்க வந்திருந்தவர் கை தட்டி ஆரவாரஞ் செய்தனர். ஆட்சியாளரின் முகங்கள் வெளுத்தன. என்றுமில்லாக் காட்சி எங்கிருந்து வந்ததெனத் திகைத்தனர். இதே இந்துக் கல்லூரி ஈட்டிய முதல் வெற்றியாகும். விளையாட்டுக்கள் ஆரம்பமானதும் என்றுங் காணாத உத்வேகத்தோடு முயன்று ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒவ்வொரு பரிசுகள் பெற்றனர். பரிசளிப்பு விழா ஆரம்பமானது. இந்துக் கல்லூரியினது பெயர் ஒவ்வொரு நிகழ்ச்சியிலேயும் வந்துகொண்டேயிருந்தது. பொது மக்களின் கரகோசமும் ஆர்ப்பாட்டமும் வானைப் பிளந்தது. வெற்றி நமக்கே என்ற பழைய நம்பிக்கையுடன் பாண்ட் வாத்தியத்துடன் வந்தவர்கள் பாண்டை நிறுத்திவிட்டு அமைதியாகப் பாடசாலைகளுக்குத் திரும்பினர். ஆகக் கூடுதலான பரிசுகளைப் பெற்று விளையாட்டு வீரன் என்ற பரிசை இந்துக் கல்லூரி மாணவன் முகம்மது ஜெயின் முதன் முறையாகப் பெற்றான். அந்த மாணவன் இப்பொழுது கொழும்பு துறைமுகப் போலீசாருக்குத் தலைவராயிருக்கிறான். உணர்ச்சி வேகத்தால் உந்தப்பட்ட மக்கள் வெற்றி வீரனைத் தம் தோளின் மேல் ஏற்றிக்கொண்டு மைதானத்திலிருந்து பாடசாலைக்குப் பவனி சென்றனர். எவ்வித முன்னேற்பாடுகளுமின்றிப் பொது மக்கள் ஓர் சிறந்த பாராட்டு விழாவை நடத்தினர். இக் கண் கொள்ளாக் காட்சியானது இன்றும் என் மனதில் புதுமையாகவே இருக்கின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தர் விழா படம்



## விழா ஊர்வலம்

36-ம் பக்கத்தின் பட விளக்கம் :

## சுவாமி சிதானந்தஜீ

**இமயமலை ரிஷிகேச திவ்ய ஜீவன சங்கத்தின் தலைவர். சுவாமிஜீ இலங்கைக்கு வந்தபோது திருகோணமலை இந்துக் கல்லூரிக்கும் விஜயம்செய்து மாணவர்களை ஆசீர்வதித்தார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருக வழிபாடு

பண்டிதர் ஆ. சபாபதி அவர்கள்

பல ஆயிர ஆண்டுகளுக்கு முன் தமிழர் மலையிலும் மலைசார்ந்த இடங்களிலும் வசித்த போது நெற் செய்கையில் அவர்கள் ஈடுபடவில்லை. தினை, சாமை முதலியவற்றை விதைத்துப் பாதுகாத்துப் பயன்பெற்று அவற்றை தேன், மான், பன்றி முதலியவற்றின் இறைச்சிக் கறிகளுடன் அவர்கள் உண்டனர். தினைப் புனங்களை உழுது விதைத்த பின்னர் அவற்றைக் காவல் செய்வதற்குத் தங்கள் பெண் மக்களை வைத்தனர். வீட்டுப் பெண்கள் சமயலிலேயே பெரும்பாலும் ஈடுபட்டனர். ஆண் மக்கள் தந்தையர், மாமன்மார் முதலிய இனத்தவர்களுடன் வில்லும் அம்புங் கொண்டு வேட்டையாடச் செல்வர். மலைகளிலிருந்து அருவிகள் பாய்ந்து ஓடிவந்து குளங்களிலே விழும். அருவிகளிலும் குளங்களிலும் இவர்கள் நீராடுவர். உயர்ந்த மரங்களில் கொடிகள் படர்ந்து பூச் சொரியும் அப் பூக்களைக் கொய்து பலவித மாலைகளாக்கித் தங்களுக்கு அணிவர். புலிப் பல், நகம், முதலியவைகளைத் தெரிந்து கயிற்றில் தொடுத்து மாலைகளாக அணிவர். மரப் பொந்துகளிலும் கிளைகளிலும் உள்ள தேனை எடுத்துப் புளிக்க வைத்துப் புளிப்பேறிய மதுவை உண்டுகளித்து வெறயாட்டமாடுவர். இவ்வளவுடன் நில்லாது கடவுள் வணக்கத்துக்காக கல்லையோ அல்லது தறித்த மரத்தையோ நாட்டி வழிபடுவர். அக்கடவுளுக்கு முருகன் என்று பெயரிட்டு, தினைச்சோறு, பிட்டு, பழம், தேன், இறைச்சி, மது, எள்ளுப் பொரி முதலியவற்றைப் படைத்துப் பூச்சொரிந்து வழிபாடாற்றுவர். பூசை செய்யும் பூசாரியை வேலன் என்று அழைப்பர். அவன் பூசை செய்யும் போது சில நேரங்களில் அறிவு மயங்கியும், வெறி மயக்கம் பிடித்தும், பேய் பிடித்தும் ஆடுவான். இதை வெறியாட்டு என்று அழைப்பதுண்டு. பெண்களும் தெய்வம் பிடித்து ஆடுவர். இவர்கள் பூசைக்கு வந்தவர்களுக்குக் கட்டுரைப்பது வழக்கம். நாட்டில நல்வளம் சுரக்க வேண்டுமென்பதும், நங்கையர் நல்வாழ்வு பெறவேண்டுமென்பதும் எல்லாருக்கும் விருப்பம். ஆகவே பூசைகளில் இவைபற்றியே கட்டு முரைக்கப்படும்.

இவர்கள் வழிபாடாற்றும் தெய்வத்தை முருகன் என்று அழைத்தனர். இதற்குரிய காரணமும் உண்டு. முருகன் என்ற சொல் "முருகு" என்ற அடியில் இருந்து பிறந்தது. அழகு, இளமை என்னும் கருத்தை "முருகு" என்னும் சொல் குறிக்கும். எனவே முருகன் என்னும் சொல் இளையோன் அழகன் என்ற பொருளில் வரும். சேய் (இளையோன்), வேள் (அழகன்) என்னும் சொற்கள் முருகனைக் குறிப்பிடல் காண்க. மலையழகு, அருவியின் அழகு, மரங்கொடிகளின் அழகு, பூக்கள் பழங்கள், விலங்குகள் ஆதியவற்றின் அழகு என்பவற்றிலே திளைத்த மக்கள் தங்கள் கடவுளையும் "அழகன்" அல்லது முருகன் என அழைப்பது மரபாயிற்று. மேலும் மலை முதலியன என்றும் வயது வந்து முதுமையடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாது எப்போதும் இளமை குன்றாது காணப்படும். எனவே அவர்களுடைய கடவுளையும் ''இளையோன்'' என்று அழைப்பது சாலும். பிற்கால இலக்கியங்களிலும் முருகனுக்கு சேய், இளையோன், அழகன் என்னும் பெயர்கள் வழங்குவதைக் காணலாம். ''முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனே'' என்று பரவநாச்சியர் கூற்றாகச் சேக்கிழார் பெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரைக் குறிப்பிடுவதை நோக்கினால் முருகன் என்பதன் பொருள் இளையவன், அழகன், வீரமுடையவன் என்றெல்லாம் பிற்காலத்திலும் பொருள்படுவதை உணரலாம்.

உருவம் அற்ற முருகனை வணங்கிய தமிழர் நாட் செல்லச் செல்ல அவனை அருவுருவமாக வணங்கிய செய்தியே மேலே கூறப்பட்டது. நாட் செல்லச் செல்ல முருகனைப் பற்றிய செய்திகளைச் சிவ சமயத்துடன் தமிழர் சேர்த்தனர். அப்போதுதான் முருகன் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து அழற் பொறியாகப் பிறந்ததும், கார்த்திகைப்பெண்கள் பாலூட்டி வளர்த்ததும், பிரமன் தலை கொய்ததும், சூரனை வென்று தேவருக்கு விடுதலை தந்ததும் பின்னர் வள்ளியை மணந்ததுமாகிய புராணக் கதைகள் பல முருகனுடைய வரலாற்றுடன் இணைக்கப்பட்டன. முருகனுக்குரிய தமிழ் நாட்டின் மலைகளும், கடற்கரைகளும், பூஞ்சோலைகளும், பழச் சோலைகளும் முருகனுடைய படை வீடுகளாகக் கருதப்பட்டன. திருப்பரங்குன்றம் திருவேரகம் (சுவாமி மலை,) திருவாவிகன்குடி (பழனி மலை), குன்று தோறாடல் (என்று பலர் சொல்லுகிற அழகர் மலை) என்னும் நான்கு மலைகளும், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்) என்னும் நெய்தல் (கடற்கரை) பிரதேசவூரும், பழமுதிர்சோலை என்று பழம் பழுத்துதிர்கின்ற சோலைகளும் முருகனுடைய படைவீடுகள் என்று கருதப்பட்டன. இதை நக்கீரர் கி. மு. 2ம் நூற்றாண்டிலே திருமுருகாற்றுப் படையிலே உறுதி செய்கிறார் பழமுதிர் சோலை என்று ஒரு இடமோ தலமோ இல்லை. பழமுதிர்சோலையைப் பற்றிய விபரங்களை உற்று நோக்கும்போது அது கதிர்காமத்தைக் குறிப்பிடுவது போலவும் தெரிகின்றது. கி. மு. 3000 ஆண்டுகளுக்கு நிகழ்ந்த பெருங் கடற்கோளுக்கு முன்னர், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலே ஒரு ஆறு மாத்திரம் இருந்தது என்றுகூறும் ஸ்கட், எலியட், போன்ற நிலநூல் ஆராய்ச்சியாளர் கண்டு, அறிஞர் ஒப்புக்கொண்ட முடிவுகளையும் இங்கே நோக்க வேண்டி இருக்கின்றது.

வடமொழியிலுள்ள வேதங்களிலோ, உபநிடதங்களிலோ முருகனைப் பற்றிய செய்திகள் ஒரு சிறிதும் இல்லை. பரிபாடலின் ஒன்பதாம் செய்யுளில் வடமொழியாளர்களுக்குத் தமிழர் பண்பாட்டையும், முருகனுடைய செய்திகளையும் கி. மு. 2ம் நூற்றாண்டளவில் வாழ்ந்த குன்றம் பூதனார் எடுத்துரைக்கிறார். வடவர்கள் தென்னாட்டுக்குவந்து அரசியலையும், வைதீக சமயத்தையும், வடமொழியையும் பரப்புவதற்கு வழியாகப் புராணங்களை ஆக்கிய புராணகாலத்திலே முருகவழிபாடு குமார வழிபாடாகி சைவத்துடன் கலந்துவிட்டது. இப்படியிருந்த போதிலும் தமிழர்களிடத்திலே முருகனுடைய வரலாறு பற்றிப் பல கதைகள் இருந்தன.முருகவழிபாடும் இதனால் சிறந்து விளங்கத்தொடங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்று. பின் நாட்களில் முருகன் கந்தனுகினுன் அவனே வடவர்கள் சுப்பிரமணியனுக்கி விட்டனர். இதுபற்றி விபரிப்பில் பெருகிவிடும் ஆதலின் நிறுத்துவோம்.

முருக வணக்கத்தினுல் பிற்காலத்தில் தமிழ் மொழி பெற்ற வளத்தையும், சிறப்பையும் எழுதி முடிக்க இக்கட்டுரை இடம் தராதுஆயினும் கச்சியப்ப சிவாச்சாரியருடைய கந்தப் புராணத்தையும், கவிராட்சதன் கச்சியப்ப முனிவருடைய தணிகைப் புராணத்தையும் முருக வழிபாட்டைக் குறிக்கும் மற்றும் புராணங்களையும் படிக்குந்தோறும், படிக்குந்தோறும் முருகனுடைய பேரருளும், தமிழ் மொழிச் சிறப்பும் சைவ சமயத்தின் நுண்ணிய உண்மைகளும் தெள்ளிதிற் புலப்படும். அருணகிரிநாதருடைய திருப்புகழ் முருக தத்துவத்தை விரித்துரைக்கும் முகத்தால் எழுதப்பட்டதாயினும் தமிழ் மொழியின் பல வகைச் சிறப்புகளையும் விரித்து உரைக்கிறதென்பதை மறுப்பதற்கில்லை. குமரகுருபரர் முதலிய பிற்காலப் புலவர்கள் முருக பக்தியால் எழுதிய இலக்கியக் குவைகளை ஆராய்ந்து படிக்குந்தோறும் கௌமார சமயம் சைவசமயத்தின் ஒரு கூறு என்பது தெரியும். அவற்றில் சைவ சமயத்தின் விளக்கங்கள் புலப்படும். தமிழ்மொழி என்னும் பூங்காவின் அழகும் விளங்கும்.

● ●

## சுவாமி விவேகானந்தர் விழா படம்



**பிரேமாத்மா நந்தாஜீ**
(தலைவர் இராமகிருஷ்ண மிஷன் இலங்கைக் கிளை)
அவர்கள் விழாவில் உறையாற்றிக் கொண்டிருக்கிருர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் நினைந்தூட்டும் தாய்

**பண்டிதர் பொன். கிருஷ்ணபிள்ளை விரிவுரையாளர்**
(பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி), வசாவிளான்.

கலையும் பிணையுமாகிய இரு மான்கள் தம் முன் ஒன்றிக் காட்டகத்தே பல இடையூறுகளுக்கும் தப்பி இன்பமாக வாழ்ந்தன. ஒன்றினை ஒன்று விட்டுப்பிரியா இப்பிரிய சீவன்களின் பிரியத்தின் பயன் போல ஒரு குட்டியை ஈன்றது. பிணைகலைக்கு ஏற்பட்ட இன்பத்திற்கு எல்லையே இல்லை. புல்லுப்பிடிக்கத் தெரியாத அத்துணை இளம் பருவத்தில் இக்குட்டியின் தாய் ஊன் தின்னும் பாவி ஒருவன் கையிற் சிக்குண்டது. கலையும் குட்டியும் பிணைவரும் திசைநோக்கி இணை விழிகளைப் பரப்பின. ஒரு தினம் முழுவதும் அல்லலிற் கழித்த அவை மறுநாட் காலையும் பிணைவராமையால் அதன் கதியை உணர்ந்தன. பிணையைபிரிந்த கலை பிணம் போல அசைவற்று துக்கமிகுதியில் ஆழ்ந்திருக்கக் குட்டியோ பிரிவுத் துன்பத்துடன் பாலாம் உணவின்றிச் சோர்ந்தது. அதன் மென் விழிகள் கலங்கின. கலையை உற்று உற்றுப் பார்த்தது. கலைகுட்டியை அன்புடன் அணைத்து விழி நீர் சோர நக்கிற்று. பாவம்! ஏழைக்குட்டி அக்கலைக்குத் தன் பசியை போக்கும் மடித்தலமுண்டா என ஆவலுடன் பார்த்தது. "ஐயோ! என் உயிரனையாளைத் தவிர்த்து உன் பசிக்குப் பாலமுதூட்டும் வல்லபம் எனக்கு ஈசன் அளித்திலனே." என உணர்த்திக் குட்டியின் அவல நிலையைப்பார்க்க முடியாமல் நிலத்திலே சாய்ந்தது பசியினாலே துடிதுடித்த படியே குட்டியும் தந்தை மீது சாய்ந்தது. ஒருவருக்கும் தீங்கு செய்யாது கானகத்திற்குப் பெருவனப்புத்தந்து துள்ளி மேய்ந்த புள்ளிமான்களின் கதி எங்களுக்குப் பாலின் பெருமையை அருமையுடன் தெரிவிக்கின்றது.

அன்னை பாலை நினைந்து ஊட்டுவாள் அப்பன் எத்துணை அன்புடையனுயினும் இங்ஙனம் செய்யவல்லனோ? "பால் நினைந்தூட்டும் தாய்" என மணிவாசகர் ஈசனை நினைந்து கதறிய கதறலிலே எத்துணை பொருள் மறைந்து கிடக்கின்றது. தாய் சும்மாவாகவா சேய்க்குப் பால் ஊட்டுகின்றுள். "ஐயோ இப்பசுங்குழவிக்கு ஊட்ட மேலும் பாலில்லையே. உள்ளதை முழுவதாகச் சேய்க்கு ஊட்டி விடுவோம் என நினைந்து நினைந்தல்லவா அன்பில் நனைந்து நனைந்தல்லவா குழந்தைக்கு ஊட்டும் தொழிலில் ஈடுபடுகிருள். அவள் உயிரே கரைந்து கரைந்து பாலாக வருவதனாலல்லவா குழந்தை உயிரூட்டம் பெறுகிறது.

எத்துணை பலவித உணவுகளை நாம் உட்கொண்டாலும் அவையெல்லாம் பாலைப்போலப் பரிசுத்தமான பரிபூரண உணவாக அமைய முடியுமா? வாழ்வின் ஆரம்பத்திலே—பிறந்த நாளன்றுதொட்டே தாய் சேய்க்கு அளிக்க ஆண்டவனும் இயற்கையும் ஈந்த பாலுக்குச் சமமான தொன்றுளதோ? மனிதவர்க்கம் மூர்க்கப் பிராணிகளாகிய பிற உயிர்களின் தசையையே உண்ணும்—புலி கரடிப்பாலை உண்ணுதலுமுளதோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென் பசும் புல்லை மேய்ந்து தனியிடத்திருந்து இரைமீட்டுநல்லுணவாக்கி மக்களுக்களிக்கும் பசுவையும் ஆட்டையும் நம்பியன்றோ—அவைதரும் சுவைப்பாலுணவை உண்டல்லவா — மனிதவர்கத்தில் குழவியும் கிழவனும் நனி மகிழ்வெய்த இடமுண்டாகின்றது. நடுத்தர வயதுடையவனும் திடகாத்திரவாலிபனும் பசுந்தரும் பாலை உண்டன்றோ உடலை அழகும் வழமுறச் செய்கின்றனர். ஆகவே எத்தன்மை உடையார்க்கும் பால் இன்றியமையாதது.


பெருங் கல்விமானும் அகநூல் விற்பன்னருமாகிய ஒரு பெரியாருடன் ஒரு நாள் கதைத்துக் கொண்டிருந்த போது நல்ல சைவக் குடியிற் பிறந்து இப்போது குடி வெறியில் ஆழ்ந்திருக்கும் ஒருவரைப்பற்றி எங்கள் பேச்சுத்திரும்பிற்று. அகநூல் வல்லுனர் அதற்குரிய காரணத்தைச் சுவைபட விளக்கினர். குடிகாரனின் தாய் இவர் பிறந்த அண்மையில் இறந்துவிடத் தந்தையார் பிள்ளையை வளர்த்து வந்தார். மறு கலியாணமும் செய்துகொண்டு பிள்ளையைச் சகோதரி வீட்டிலே வளர விட்டுவிட்டார். சகோதரி புருஷன் பெருங் குடிகாரன் வஞ்சகமின்றித் தான் பருகும் மதுவைப் பிள்ளையும் பருக வைத்தான் பாலூட்டும் தாயிற் பற்று வைப்பது போல மதுவூட்டும் முட்டியிலும் ·ட்டியிலும் அவனுக்கு இயற்கையிலேயே பற்று வந்துவிட்டது. நீட்டிக் கூறியென்? இத்தகையவன் பிற்காலத்தில் பெருங்குடிகாரனானது அதிசயமா என்றார் அறிஞர்.

தாய் பிள்ளைக்குப் பாலை மாத்திரம் ஊட்டவில்லை அன்பையும் சேர்த்து ஊட்டுகிறாள். ஆகவே பிள்ளைக்கு இயற்கையிலேயே தாய்ப் பாசம் ஏற்படுகின்றது. பாலுடன் தாயூட்டும் தமிழிலும் பற்றுமிகுந்து விடுகின்றது. தாய்ப்பாலுக்குப் பதில் புட்டிப்பாலை ஊட்டினால் பிள்ளைக்குப் புட்டியிலும் முட்டியிலும் பற்று வந்துவிடும். ஆகவே தாயார் பாலூட்டிவரின் பிள்ளை பூரண உணவுடன் உடல்வலிவும் தாய்ப்பற்றும் பெற்றுக்கொள்ளுகிறான். கூலிக்குப் பாலூட்டுபவர் பிறர் குழந்தைக் ந எரிந்து எரிந்து அதனை ஊட்டப் பிள்ளையின் உடலில் நஞ்சுக் குணமே ஊறிவிடும்.

ஆகவேதான் நம் சைவப்பெரியார் இறைவனையும் பெண்பாலாக்கி "பெண் ஆணாய் பேரருளான் பெண்ணாகிய பெம்மான் " அம்மானென வுள்கித் தொழு வார்கட் கருள் செய்யும் பெம்மானவன். என உலகமாதா ஊட்டி ஞானப்பாலுண்ட சம்பந்தப் பிள்ளையும் "சீரிட்டவுலசன்னை வடிவான எந்தையே சித்தாந்த முத்திமுதலே......... தக்ஷிணா மூர்த்தியே............ குருவே எனத் தாயுமானவரும் அருளிச் செய்துள்ளார்.


இவ்வளவில் நிறுத்திவிடாது இறைவனைத் தாயாகவே நாம் முழுவதும் வழிபட நம் முன்னோர் நவராத்திரிக் கொண்டாட்டமும் ஏற்படுத்யுள்ளனர் குளிர்ந்த புரட்டாதி மாத நவராத்திரி இரவிலே எம் உள்ளமும் குளிர அப்பனை அம்மையாகப் போற்றி வழிபட வழிபடத் தாய்ப் பற்றும் தாய்மொழிப்பற்றும், தாய் நாட்டுப்பற்றும் தாமாகவே வந்தடையாவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருக்கரை - திருமங்கலாய் படங்கள்:

முதலாவது படம்:

திருக்கரைசை மா நகரில் அகத்திய முனிவரால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம்.

இரண்டாவது படம்:

திருக்கரைசை அகத்தியர் ஸ்தாபன அழிந்த ஆலயத்தின் வாயிற்படிகளில் ஒன்று.

மூன்றாவது படம்:

திருமங்கலாய் - அழிந்த ஆலயத்தின் ஒரு பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Visit*

**PARANJOTHY MEDICAL STORES**

194, Ahambaram Road, Trincomalee

*FOR ANY OF YOUR MEDICINES*

**AYURVEDIC AND WESTERN**

Call: 419

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையில்

# சைவசமய வளர்ச்சி

வை. சோமாஸ்கந்தர் புலவர், (அண்ணாமலை)
அதிபர், நாவலன் அக்கடமி.

வீணைக் கொடியோனாகிய இராவணன் இலங்கையை ஆண்ட இதிகாசகாலத்திலேயே திருகோணமலையில் சிவ வணக்கம் நிலைபெற்றிருந்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன: இராவணன் வாழ்க்கையோடு திருகோணமலை தொடர்புற்ற செய்திகளைப் புராணச் செய்திகளால் அறிகின்றோம். எனவே திருக்கோணமலையின் சைவசமய வளர்ச்சி வரலாற்றுக்கு முற்பட்டதெனக் கொள்வதில் ஐயப்பாடில்லை.

கி. பி. ஆறாம் நூற்றாண்டில் மகாநாம என்ற புத்ததுறவியால் எழுதப்பட்ட மகாவம்சம் என்ற நூலில் திருகோணமலை பற்றிய செய்தியும் இங்கு சிவ வணக்கம் இருந்ததென்பதற்கு ஆதாரம் அளிக்கும் செய்தியும் காணப்படுகின்றன.

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் பாடிய திருகோணமலைப் பதிகத்தால் திருக்கோணேஸ்வரத்தின் தெய்வீகப் பொலிவையும் சமூக, பொருளாதார நிலையையும் இயற்கைச் செழிப்பையும் பிற செய்திகளையும் ஆழ்ந்து ஆராயின் உணரலாம்.

கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழான் பெருமான் தாம் பாடிய பெரிய புராணத்தில்,

''ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னு திருக்கோணமலை என்றும்,
திருக்கோணமலை மகிழ்ந்த செங்கண் மழவிடையார்''

என்றும் கி. பி. பதினாலாம் நூற்றாண்டில் வாழ்ந்த உமாபதி சிவாச்சாரியார் தாமியற்றிய சிவ நாமக் கவி வெண்பாவில்,

''மன்னு திருக்கோண மாமலையின் மாதுமைசேர் பொன்னே
கோணேசப் புராதனே''

என்றும் கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர்,

''நிலைக்கு நான் மறைதவத்தான பூசுரர் திருக்கோணமலை தலத்தாரு
கோபுரம்''

என்று குறிப்பிடுவதால் திருக்கோணமலையில் கோயில் கொண்ட திருக்கோணேசப் பெருமானின் சிறப்பும் திருக்கோணமலையில் சைவசமயம் வளர்ச்சியுற்று நிலைபெற்ற தன்மையும் அறிகின்றோம்.

கி. பி. பதினாறாம் நூற்றாண்டில் திருகோணமலைப் பகுதி சிலகாலம் கண்டியரசனுக்குக் கீழும், சிலகாலம் யாழ்ப்பாண அரசனுக்குக் கீழும் இருந்ததென்பது அறியக்கிடக்கின்றது. அகன்ற துறைமுகத்தில் ஒரு பெரிய கற்பாறை தரையிலிருந்து கடலை நோக்கி நிற்கின்றது. இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசர்கள் மலையின் மீது மூன்று கோவில் (பகோடா) அமைத்தனர். அவைகளில் இரண்டு அம்மலையின் சமுத்திரக் கரையில், இரு ஓரங்களிலு முள்ளன. மூன்றாவது மலையின் உச்சியான நடுப்பகுதியில் அமைந்துள்ளது. மூன்று கோவில்களிலும் இக்கோவிலே மிகவும் முக்கியமானதும் இந்தியாவில் மிகுந்த பக்தி சிரத்தையுடன் வணங்கப்படுவதும் பெருந்திரளான மிலேச்சர்களால் வணங்கப்படுவதுமான ஆலயமாம். கடலிற் பிரயாணம் செய்யும் மிலேச்ச மாலுமிகள் அம்மலை கண்ணிற்பட்டவுடன் தொழுவார்கள். தவறான வழிபாட்டு நிலையில் உள்ள சமயப்பித்தர்கள் கடலுக்கு மேலாகத் தோன்றும் கடைசிக் கோவிலிலிருந்து (பகோடா) தெய்வங்களுக்குத் தங்களை அர்ப்பணிக்கும் நோக்கத்துடன் குதிப்பார்கள். உடல் துண்டு, துண்டாகச் சிதறி மலையடிவாரத்தில் விழுவதால் சுவர்க்கத்தை அடைகின்றார்கள் கொன்ஸ்டன் டிஞேபீசா இக்கோவில்களை இடித்து அக்கற்களைக் கொண்டு கோட்டையைக் கட்டினான்.

("Over that large harbour there Juts out from the land into the sea a rock on which the kings of Ceylon erected three Pagodas, two at the entremities of the hill over hanging the sea & one in the middle and the highest Point, which was the principal one, and one of the most venerated in India, being worshipped by the idolatrous navigators who descry it from the sea, and much frequented by a concurse of Pagars from the whole (of india) so fanatical in their false devotion that from the last Pagoda, which stands on the rock over the sea they throw them selves down in sacrifice to their idols reaching the bottom in pieces being persuaded that by hat leapinto hell they are ligted upto Paradise Constantine de sa de noronha dismantled these Pagodes making was of their stones to build a fortress to close that harbour chingla'' (Paga 66 at Book I of conguest of Ceylon by Fernau-de Quegroz)

கொன்ஸ்டைன்டைன் தீசாவின் மகன் ஜோ ரெட்றிகேடிசா கி. பி. 1679ம் ஆண்டில் வெளியிட்ட ஒரு நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்

மலையின் உச்சிக்குச் செல்லும் செங்குத்தான வழி தொடங்குமிடத்தில் ஒரு பகோடாவும் (ஒரு கோவிலும்) மற்றையது செங்குத்தான பாதையின் மத்தியிலும், மிகவும் சிறப்புவாய்ந்த மற்றையது (பகோடா) உச்சியிலும் இருந்தது. மூட நம்பிக்கையுள்ள பெருந்தொகையாது யாத்திரிகர்களால் வணங்கப்பட்டமை அதன் கட்டிட அமைப்பிலும் சிற்பக் கலை நுட்பத்திலும் பார்க்க புகழை ஈட்டியது.

(On the first rise to the summit of the rock was a Pagoda, and there mid as—Cent and the most tamous of them all on the highest eminence which was looked upon and worship with great superstition by Crowds of won dering Pilgrims and for this reason was more celebrated then for the building itself and the beauties of its architecture— ''Rapalion de Ceylon'' by Joao Rodriguez de sa menezes wiritten in 1967.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி. பி. 1803ம் ஆண்டில் கடமையாற்றிய அலெக்சாண்டர் என்பார் கோணேசர் மலையில் வழிபாடு நடைபெற்ற முறைகளை விபரமாக விளக்குகிறார். எனவே பிரித்தானியர் ஆட்சியேற்றம் ஏற்றதும் மதச் சுதந்திரம் அளித்து விட்டனர் என்பது தெளிவு. அக்காலத்தில் அர்ச்சகரும் வழிபாடு செய்வோரும் கோணேசர் மலைக்குச் செல்வதற்குக் கோட்டையின் மேற்குத் திசையில் இருக்கும் சிறிய கோட்டை வாயிலை உபயோகித்தனர்.

அக்காலத்தில் கோணேசர் மலையில் பூசை செய்த அர்ச்சகரும் வழிபாடு செய்வதற்கு விசேட காலங்களில் அனுமதி பெற்றேசென்றனர் என்பதை பழைய அனுமதிக் கடிதங்களால் அறியலாம் விசேட காலங்களில் அர்ச்சகரும் வழிபடுவோரும் மாட்டுவண்டியிற் பொருட்களை ஏற்றிக்கொண்டு மேள வாத்தியத்துடன் செல்வார்கள். வெள்ளிக்கிழமைகளில் சாதாரணமாக மாலையில் அர்ச்சகரும் வழிபடுவோரும் வழிபாட்டுக்குச் செல்வார்கள்.

1878ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் தேதி கடிதத்தின்படி கொழும்பிலுள்ள கலோனியல் செக்ரிட்டரி அலுவலகத்தில் இருந்து சுவற்றன் ஹாம் என்பவரின் கையொப்பமிடப்பட்டு அர்ச்சகருக்கு வந்தகடிதத்தால் கோணேசர் மலையில் கொட்டகை ஒன்றும் வெறும் இடமாகவே இருந்ததென்பது தெளிவாகின்றது.

''There is now left only the bare site of the magnificent temple (Page 636) என்று உறுதி கூறியுள்ளார்.

திருகோணமலை இந்துக்களுக்கு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்கு கிறீத்துவ மத பீடமே ஆதாரமளிக்கின்றது. பதினாறும் நூற்றாண்டில் இந்தியாவின் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த மக்களிற் பெருந்தொகையானவர்கள் கத்தோலிக்க மதத்திற்கு ஈர்க்கப்பட்டனர். இதற்குக் காரணகர்த்தாவாக இருந்தவர் பரிசுத்த பிரான்சீஸ் சவேரியார் என்பவர். அவர் திருகோணமலைக்கு வந்து நேரடியாக இங்குள்ள நிலைமையைப் பார்வையிட்ட பின்னர் ''கீழைத்தேய மிலேச்சர்களின் உரோமாபுரி'' எனத் திருகோணமலையைப்பற்றி விபரித்துள்ளார்.

(The Rome of the heathens of East ''History the Catholic Chureh'' in vol I. by Rew. Fr. Granapragasam.)

இராமேஸ்வரம், சிதம்பரம், காஞ்சிபுரம், திருப்பதி திருமலை ஐனுத் விசுவனுத் ஆகிய திவ்விய தலங்களிலும் மேலாக யாத்திரிகர்களுக்கு முக்கிய இடமாக இருந்தது என வண. பிதா ஞானப்பிரகாசர் கூறியுள்ளார். பண்டைக்காலத்தில் இந்தியர்களாலும் தரிசிக்கப்பட்ட தலம் என்பதைக் குறிக்கு முகமாக இதைக் கூறியிருக்கலாம். இந்தப் பரந்த உலகத்தில் பகுதிகள் எல்லாம் வாழும் கத்தோலிக்க மதத்தினருக்குத்தலைமைப்பீடம் உரோமா புரியாக இருப்பதுபோல் இந்துக்களுக்கு இந்நகர் இருந்ததென்பது பெறப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1834ம் ஆண்டில் ஆங்கிலேயரால் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பில் திருக்கோணமலை மாவட்டத்திற்குரியது பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| புரட்டாஸ்தாந்து மதத்தினர் | | 67 |
| கத்தோலிக்க | ,, | 1,414 |
| இஸ்லாமிய | ,, | 3,245 |
| பௌத்த | ,, | 250 |
| மிலேச்சர்கள் (Heathers சிவவணக்கமுடையவர்கள்) | | 14,182 |
| மொத்தம் | | 19,158 |

இன்றைய திருக்கோணமலை, கோயில்கள் நிறைந்த தெய்வத்திரு நகராகக் காட்சியளிக்கின்றது. மலையா வெளிப்பிள்ளையார் கோவில், வில்லூன்றிக் கந்தசுவாமி கோவில், வெள்ளை வில்வம் கோணேசர் கோயில், முத்துக்குமார சுவாமிகோயில், புதுரோட்டுக் கற்பக விநாயகர் கோயில், விஸ்வநாதர் (சிவன்) கோயில், மாரியம்மன் கோயில், வீரகத்திப் பிள்ளையார் கோயில், பெரியதொடு வாய் பிள்ளையார் கோயில், சின்னதொடுவாய்ப் பிள்ளையார் கோயில், சனீஸ்வரன் கோயில், கிருஷ்ணன் கோயில், சமாதுப்பிள்ளையார் கோயில், சீர்காளியம்மன் கோயில், பத்திரகாளி கோயில், ஆலடிப்பிள்ளையார் முதலிய கோயில்கள் உள.

திருக்கோணமலையில் கோயில்களின் எண்ணிக்கை எவ்வளவு அதிகமோ அந்த அளவுக்கு சங்கங்களின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளன

திவ்விய ஜீவனசங்கம், சிவயோக சமாஜம், இளைஞர் அருள் நெறி மன்றம், இந்து வாலிபர் சங்கம், முருகன் தொண்டர் சபை முதலிய சங்கங்கள் திருகோணமலையில் சைவசமய வளர்ச்சியின் பெரும்பங்கு கொண்டு அரும்பணியாற்றி வருகின்றன. திருவள்ளுவர் கழகம், சிவானந்த சங்கம், விவேகானந்த சங்கம் முதலிய சங்கங்கள் பொதுப்பணியாற்றுவதோடு சமயப் பணியும் செய்துவருகின்றன. இந்துக்கல்லூரி ஸ்ரீசண்முகவித்தியாலயம் தக்ஷிணகான சபை நாவலன் அக்கடமி முதலிய கல்வி நிறுவனங்களும் திருகோணமலையின் சைவசமய வளர்ச்சிக்கு பெரும்பங்கு கொண்டு பணிபுரிகின்றன.

திருகோணமலைத் திருநகரைத் தெய்வத் திருநகரென்றே கூறலாம். திருகோணமலையின் சைவசமய வளர்ச்சி பல ஆயிரம் ஆண்டுகள் பழமையுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | 1834 | | 1891 | | 1091 | | 1911 | | 1953 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புரட்டஸ்தாந்து மதத்தினர். | 67 | 3.% | | | | | | | | |
| | | | 2862 | 11.% | 2970 | 10.% | 279[illegible] | 9.% | 8246 | 9.9.% |
| உரோமன் கத்தோலிக்க மதத்தினர். | 1,414 | 7.% | | | | | | | | |
| இஸ்லாமியர்கள். | 3,245 | 17.% | 7067 | 27.% | 9191 | 32.% | 10,386 | 34.% | 29152 | 35.0.% |
| பௌத்தர்கள். | 250 | 1.7 % | 1023 | 58.% | 15294 | 55.% | 31,[illegible] | 54.% | 32362 | 38.[illegible]% |
| இந்துக்கள். | 14,182 | 74.% | 14793 | | 28438 | | 29653 | | 88342 | |
| மொத்தம். | 19,158 | | 25,745 | | | | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கரைசை மாநகரும் திருமங்கலாயும்

நாகராஜா கணபதிப்பிள்ளை

மூதூர் பழம்பெரும் நகரம். இம்மாநகரத்தின் சரித்திரம். இருண்டதாகவும் ஆராட்சியாளர்களுக்கு இன்றும் புதிரானதொன்றாகவும் இருந்து வருகின்றது. இந்துக்களின் நாகரீகம் தொடங்கிய காலம் தொட்டே இம்மாநகரத்தின் நாகரீகமும் இருந்து வருகின்றது என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. புராணங்களில் கூறப்பட்டுள்ள வரலாற்றுப் பெருமைகளைக் கொண்டதும். அழகிய சிற்பவடிவங்களைக் கொண்டதுமான எத்தனையோ மாபெரும் ஆலயங்கள் மூதூர் பகுதியிலுள்ள காடுகளில் அழிந்த நிலையில் கவனிப்பாரற்று பூசைப்பணிகளின்றி மறைந்து கிடக்கின்றன. மறைந்து கிடக்கும் ஆலயங்களில் மிக முக்கியமானவை திருக்கரைசை மாநகரத்தில் அகத்தியப் பெருமானால் ஸ்தாபிக்கப்பட்டலிங்கத்தினையுடைய அகத்தியர் ஸ்தாபனமும். சிங்கபூதரன் என்ற அரசனால் திருமங்கலாயில் அமைக்கப்பட்ட சந்திரசேகரர் ஆலயங்களுமாகும்.

இவ்வாலயங்களின் வரலாற்றினை திருக்கரைசைப் புராணமூலம் ஓரளவிற்கு அறியக்கூடியதாகவிருக்கின்றது. இப்புராணத்தினை எழுதிய ஆசிரியர் யார் என்பது இன்னும் புதிராகவேயிருக்கின்றது. உமாபதி சிவாச்சாரியாரின் பரம்பரையில் உள்ள ஒருவரே இதனை எழுதியுள்ளார் என்பது சிலரின் கருத்து. ஆசிரியர் யாராகவிருப்பினும் சிதைந்து போகும் தறுவாயிலிருந்த புராணத்தின் ஏட்டுப்பிரதிகளை தம்பலகாமம், கொட்டியாபுரப்பற்று, கட்டுக்குளப்பற்று, முதலிய இடங்களிலிருந்து தருவித்து ஒன்று சேர்த்து, பரிசோதித்து திரு. குமாரசுவாமிப்புலவரவர்களைக் கொண்டு விளக்க உரையும் செய்வித்து, பதிப்பித்துத் தந்து உதவிய திருக்கோணமலையைச் சேர்ந்த காலஞ்சென்ற தமிழ் அறிஞர் திரு. வே. அகிலேசபிள்ளையவர்களுக்கு தமிழுலகம் என்றும் கடமைப்பட்டுள்ளது. அப்பெரியார் இப்புராணத்தினைப் பதிப்பிக்காதிருப்பின் திருக்கரைசை மாநகரமும், திருமங்கலாயும் இதுவரை மக்கள் உள்ளங்களிலிருந்து மறைந்து போயிருக்கும்.

## திருக்கரைசை மாநகரும் அகத்தியர் ஸ்தாபனமும்

மூதூர் முகத்துவாரத்திலிருந்து சுமார் 11 மைல் தொலைவில் கங்குவேலிக் கிராமத்திற்கருகாமையில் உவகை ஆட்கொள்ளும் ஈசனின் பாதங்களைக் கொண்டுள்ள சிவனொளிபாதத்தில் ஊற்பத்தியாகி தெட்ஷண கைலாசமாகிய கோணலிங்கப்பெருமான் கோயில்கொண்டருளிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலையிலுள்ள சமுத்திரத்தில் வந்து கலக்கின்ற மகாவலிக் கங்கைக் கரையிலே வனப்பு மிகுந்த திருக்கரைசை மாநகரம் உள்ளது.

சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் நடைபெறுகின்ற திருமணத்தைக் காணும்பொருட்டு சகல தேவர்களுடனும், முனிவர்களுடனும், எல்லாம் அறிந்த தமிழ் முனிவரும், சப்த சமுத்திரங்களையும் குடங்கையிலடக்கியவருமான அகத்திய முனிவரும் வந்திருந்தார். இவர் வருகையினால் வடதிசை தாழ்ந்து தென் திசை உயர்ந்தது. இந்த ஆபத்தினை அறிந்த இறைவன் தமிழ் முனிவரான அகத்தியரை அவரது வாசஸ்தலமாகிய பொதிய மலைக்குப் போகுமாறு கட்டளையிட்டு தமது திருமணக்கோலத்தை தெட்ஷணகைலையிலுள்ள மகாவலிக்கங்கைக் கரையிலமையப்பெற்ற திருக்கரைசை மாநகரில் கண்டுகளிக்குமாறும் வேண்டினார், இவ்வேண்டுகோளைச் சிரமேற்கொண்டு தெட்ஷண கைலையை நோக்கிச் சென்று வெள்ளிமலையின் ஒரு கொடுமுடியாய் எழுந்தருளி, திருக்கோணமலையில் கோயில் கொண்டருளியிருக்கும் திருக்கோணலிங்கப் பெருமானை தரிசித்துவிட்டு, திருக்கரைசையம்பதியையடைந்து இறைவனது திருப்பாதங்களை விளக்கிச் செல்கின்றதும், பரிமளம் பொருந்திய அளவற்ற வெண்மையான மாவிலிங்கங் கமழ்கின்ற பெருமை பாருந்தியதும், உலகில் எந்தத் தீர்த்தத்திற்கும் நிகரற்றதுமாகிய மகாவலிக் கங்கையின் மகிமையை உணர்ந்து அதில் ஸ்நானம் செய்தார்.

புண்ணிய தீர்த்தமாடிய முனிவர் மகாவலிக்கங்கையின் கீழ்க்கரையிலே திருக்கோணநாயகப் பெருமானின் விருப்பப்படியே சிற்ப சாஸ்திர முறைப்படி கற்றுணர்ந்த வல்லுனர்களைக் கொண்டு கற்கோயிலமைத்து சிவலிங்கமொன்றையும் ஸ்தாபித்துப் பிரதிஷ்டை செய்து, தீர்த்தேஸ்வரன் என நாமம் சூட்டி உமையாளையும், நவதீர்த்த விநாயகரையும், முருகனையும் பிரதிஷ்ட்டைசெய்து, மகாவலியின் நீரினாலே அபிஷேகம் செய்து வழிபட்டார். இறைவனும் முனிவர்பால் அருட்கொண்டு உமாதேவி சமேதராக திருமணக்கோல வடிவுடன், ஸ்தாபித்த லிங்கத்தினின்றும் பிரசன்னமாகி அகத்திய முனிவருக்குக் காட்சி கொடுத்தார். அதன்பின்பு முனிவர் திருக்கோணமலையடைந்து பாவநாச தீர்த்தமுமாடி பின்பு பொதிகைமலையை அடைந்தார்.

அகத்திய முனிவரால் உண்டாக்கப்பட்ட ஆலயத்திற்கருகாமையில் உள்ள வவுனாவில் என்னுமிடத்தில் லிங்கம் ஸ்தாபித்த காலம் தொட்டு ஆடி அமாவாசைத்தீர்த்தம் மிகவும்சிறப்பாக நடைபெற்று வந்தது. ஆனால் காலப் போக்கில் அகத்தியர் ஸ்தாபனமும், திருக்கரைசை மாநகரமும் அழிந்து பாழடைந்தது. ஆலயப் பரிபாலனமும் காலக்கிரமத்தில் அழிந்து போயிற்று. ஆலயம் அழிந்த பிற்பாடும் கூட அயல் கிராமங்களிலுள்ள மக்கள் மகாவலிக்கங்கைக் கரையிலே ஆண்டுக்கொருமுறை ஆடி அமாவாசைத் தீர்த்தம் ஆடுவதைத் தொடர்ந்து செய்து வந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமங்கலாயும்

# சிங்கபூதரனின் புனருத்தாரனமும்

7-ம் நூற்றுண்டில் சூரியவம்சத்தைச் சேர்ந்த சிங்கபூதரன் என்ற அரசன் இலங்கை வந்து பின்பு மூதூர்ப்பகுதியிலுள்ள திருமங்கலாய் (அல்லைக்கொலனியில் இருந்து நான்கு மைல்) என்னும் இடத்தை வந்தடைந்து அவ்வூரினை ஆண்ட அரசனின் மகள் திருமங்கையைத் திருமணம் முடித்தான். சிங்கபூதரன் திருமங்கலாயிலே சிறப்புச் சிறப்புகளைக் கொண்ட சிவாலயமொன்றையும் கட்டுவித்து சீரும் சிறப்புமாக ஆண்டுவந்தான்.

சிங்கரபூதரனும் திருமங்கையும், அகத்தியர் ஸ்தாபனத்தினருகில் அமையப்பெற்ற மகாவலிகங்கைத் தீர்த்தத்தின் மகிமையினை நன்கறிந்து அங்கு தீர்த்தமாட வந்தனர். அவர்கள் தீர்த்தமாடித் திருப்புகையில், அகத்தியர் ஸ்தாபனத்தின் அழிந்த நிலையினைக் கண்ணுற்று, மனம் நொந்து,"அடர்ந்த காட்டின் நடுவே ஜோதிமயமாய் விளங்குகின்ற லிங்கத்தினைக்கண்டு, பெருமானுக்கேற்ற விடமிதுவேயென எண்ணிகாடுகளை வெட்டி, மீண்டும் பெரியதோர் ஆலயம் அமைத்து, வயல்களையும்தோட்டங்களையும் உண்டாக்கி, குடிகளையமர்த்தி," மீண்டும் அவ்வாலயத்தினை பழைய நிலைமைக்கு கொண்டுவந்து, புனருத்தாரணம் செய்தான்.

திருக்கரைசை மாநகரம் மீண்டும் பழைய நிலையடைந்து. இதனுண்ட மக்கள் பல பகுதிகளிலிருந்தும் வந்து மீண்டும் குடியேறினர். மக்களுக்கு வேண்டியவைகள் யாவற்றையும் சிங்கபூதரனே செய்து கொடுத்தான். மகாவலியும் மீண்டும் புதிய மெருகுடன் ஓடியது.

ஆனால்!!! காலம், இலங்கையில தமிழ் மன்னர்களை தொடர்ந்து ஆட்சி செலுத்த விடவில்லை. திருக்கரைசையும் திருமங்கலாயும்மட்டும் இதற்கு விதிவிலக்கா என்ன? சிங்கபூதரனும திருமங்கையும் காலக்கிரமத்தில் மறைந்தனர். இரு நகரங்களும் தாயற்ற குழந்தைகள் போலாகியது. இயற்கையன்னை கோர ரூபத்தில் தாண்டவமாடினுள். ஆலயங்களும் நகரங்களும் வெள்ளப் பெருக்கினுலும், படையெடுப்புகளினுலும் அழிந்தன. இருந்தவர்களும் நோய்க்குப் பலியாகி மாண்டனர். திருக்கரைசை மாநகரும் திருமங்கலாயும் மறைந்த மாநகரங்களாயின. இரு ஆலயங்களிலும் ஒலித்துக்கொண்டிருந்த மணிகளின் நாதம் நின்றுவிட்டது. இயற்கையன்னை தனது கரங்களாகிய மரங்கள லும், கொடிகளாலும் மாபெரும் ஆலயங்களை மூடி மறைத்துவிட்டாள். அந்நகரங்களில் வாழ்ந்தவர்களில் அழிந்தவர்கள் போக மிகுதியானேர் அயல்கிராமங்களில் சென்று குடியேறினர்கள். இப்படிக் குடியேறியவர்களின் சந்ததிகள் இன்னும் கிளிவெட்டி, கங்குவேலி போன்ற கிராமங்களில் வசித்து வருகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் என்றும் கண்மூடியாக இருக்கமுடியாதல்லவா? தவமுனிவரான அகத்தியர் ஸ்தாபித்த லிங்கம் மீண்டும் மக்கள் கண்களுக்குச் சமீபத்தில் தென்பட்டது. திருமங்கலாய் ஆலயமும் அழிந்த நிலையில் இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. திருமங்கலாயிலுள்ள சில விக்கிரகங்கள் வெருகல், கங்குவேலி, நீலாப்பளை போன்ற கிராமங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருமங்கலாய் லிங்கமும், அம்மனும், வெருகல் சித்திரவேலாயுத சுவாமி ஆலய வீதியிலுள்ள ஓருசிறிய பாழடைந்த கட்டிடத்தினுள் வைக்கப்பட்டுள்ளன.

அகத்தியர் ஸ்தாபனத்தில் உடையப்பட்ட நிலையிலுள்ள சிவலிங்கள், அம்மன், சுப்பிரமணியர், மற்றும் பல விக்கிரகங்களை இன்றும் காணலாம்.

இன்று, மீண்டும் இவ்விரு இடங்களிலும் மக்கள் சிறிது சிறிதாகக் குடியேறி வருகின்றார்கள். அழிந்த ஆலயங்களை புதிதாகக் கட்டுவதற்காக மக்கள் பாடுபட்டு வருகின்றார்கள். இப்பணிக்கு ஒவ்வொரு அன்பர்களும் வேண்டியவைகளைக் கொடுத்து முன்னின்று உழைப்பார்களாகில், இவ்விரு ஆலயங்களும் பழைய நிலையை அடையும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் நமக்கு இறைவன் அருளும் கிடைக்கும்.


---



சுவாமி விவேகானந்தர் விசப்ழ படம்:
நீதியரசர், டாக்டர் H. W. தம்பையா Q. C. அவர்கள் விழாவில் உரையாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமாணவ மன்றச் செயலவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூவினுக்கருங்கலம் பொங்குதாமரை

மா. பீதாம்பரன்

கடவுள் வாழ்த்து

பங்கயத்தின் பண்புரைக்கப் பங்கயத்தில் வீற்றிருக்கும்
மங்கையரே வந்தருள்தா ரீர்.

1

பங்கயமா மலர்பரிசில் பெற்றதொரு பண்பை
வங்கத்து வாடாத மலர்தத்தை மலர்ந்தான்
அங்கிலத்தில் அவள்அருளும் அருங்கவியின் கண்ணீர்
தங்குபொரு ளுமபிறவும் சாற்றிடுவன் யானே.

2

அன்பெனுதல் அரிவையும்பூ தேவியினை நன்னி
'இன்பளிக்கும் மலரினத்துக் கிளையி' லெழில் அரசி!
நன்புடைய நந்தவன நாயகி யார்? என்று
கன்னலினும் இனியமொழி கவின்பெறவே இயம்பும்.

3

பூவினத்துக் கருட்டேவி புலவரெலாம் போற்றும்
புண்ணியஞ்சேர் புனிதவதி புகழ்ந்தனன்நின் கழலே.
காவினெழிற் காதலுக்கோர் கடவுளறி, நின்னைக்
கண்டுவழக் குரைத்தாறக் கருதியிவன் வந்தேன்.

4


''உவரோசையினம் ஒருபாலும் இலிலிஒரு பாலும்
உயர்வுடையோர் யார் என்ன உரைத்தி'' எனவந்த
வரிசையினை வகுத்துரைக்க வழியறியா யானும்
வணங்கிஉனை வகையறிய வந்தனன்என் டம்மா!

5


இராசகத்துப் பூம்பொழிலில் இலங்குமெழில் ரோசை
இராணி மலர் எனவொருசார் இசைத்திடுவர் புலவர்,
உரோமையென ஒளிர்நாட்டின் ஒண்டொடியாள் யூனோ
உருவமுறும் லில்லியலர் உயர்வென்பர் ஒருபால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய பாட வகுப்பு ஆரம்பம் :



இந்துக் கல்லூரி அதிபர் திரு. க. சிவபாலன் அருள்நெறிக்கொடியை ஏற்றி வைக்கின்றார்.



ஆரம்ப விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்களுடன் சமயபாட வகுப்பு மாணவர்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபாலும் இரைந்திருந்தே எழுந்தவெதிர் ஒலியே
செருக்களத்து முழக்கமெனச் செறிந்திடலும் எங்கும்
மருவிமலர்க் கிறைவீநின் மன்றினிடை வந்தேன்,
அருள்வழங்கி ஒருமொழியை அளித்தருள்வை அணங்கே.

பூ — தேவி புகல்வது

7

முன்னொருநாள் இருமலர்க்கும் மொழிந்தமொழி புகல்வேன்
நன்மலரே! ரோசாவே! நறுமணநாயகி! நீ
என்வதனம் எழில் விவிநீ இலங்குநெந்தன் செங்கோல்
பன்னரிய பண்பிரண்டும் படைத்தமலர் பதுமம்.

8

அன்பெனுநல் அரிவையவள் அரசிபதம் வணங்கி
மன்னுமலர் மன்றினிடை மகிழ்வுடனே வந்தாள்
துன்னுமலர் கனைவிளித்துத் ''துகள்தீர்ந்த துணர்காள்!
பொன்னனி-யருள் பொங்குமலர் பூவரசி'' என்றாள்.

9

ஆர்வமுறும் அன்புரைகள் அவையின்மிசை எழுந்த
பாரகத்தோர் "பங்கயமே பரிசில்பெற்ற" தென்றார்
வார்கடல்சூழ் வனிதையர்கள் வடிவனைத்தும் வனசம்
நீரகத்தும் நிறைமொழியார் நெஞ்சகத்தும் நிலவும்


10

பொங்கிவளர் தாமரையின் புகழுடனே புகலிப்
புண்ணியக்கன் றருள்மொழியும் பூவுலகில்விளங்க
நங்கையரின் இயலியைந்த நறுமலரின் செவ்வி
நவின்றனனே நாவலரீர் நயனுணர்ந்து கொண்மின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோணேஸ்வரர் ஆலயத்தில் இந்துக்கல்லூரி மாணவர்கள் சிரமதானத்தில் ஈடுபட்டிருக்கும் காட்சி.



★

ஆலய வழிபாடு

இந்துக் கல்லூரியின் இந்து மாணவர்கள் வெள்ளிக்கிழமை தோறும் கோவிலுக்குப் பிரார்த்தனைக்குச் செல்லும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Three Essentials of Sadhana

**Srimath Swami Shivananda Satchithananda Mathaji**
[Divine Life Society, Trincomalee.]

A profound knowledge of the Shastras is not necessarily an indicatioa that one is living one's religion. Intellect is an inadequate instrument to achieve God. There is a general tendency to celebrate religious functions by organising speeches by good speakers or song recitals etc. by good musicians. Hinduism today in this country seems more talked about than lived. H. H. Swami Sivananda one of the greatest seers of modern times says, "Constant remembrance of god, cultivation of virtues and spritualisation of all activities are three essentials of Sadhana-religious practice" Whithout practise no man can achieve the goal of religion, a life that momentarily enjoys an inexplicable peace and joy. Everyone of us do seek this. but unfortunately we do not know how and where to get it.

Coming to Sadhana:

**1. Constant remembrance of God.**

There may be breaks in the begining but by repeated practice this can be successfully practised.

"ஓராதார் நுள்ளத் தொளிக்கும் ஒளியானே"

said Manivasagar.

"கற்றவா உன்னை நான் மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே", "கற்றுணைப் பூட்டி ஓர் கடலிற் பாச்சினும், நற்றுணையாவது நமச்சிவாயவே..."

Constant Nama—Samaran-Om Nama.

Shivaya, Sri Ram, Om Para Shakthy,-alone is onough to succeed in this practice of constant Nama-Samaran. But if Nama is received from a guru-தீட்சை-the potentialities in one is unfold quicker.

**2. Cultivation of virtues:**

The most important of all virtues are Ahimsa, truthfulness and Bramacharya. Ahimsa is the practice of non-injury by thought, word and deed. Satyam is truth. "உள்ளொன்று வைத்துப்புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்"—said a great saint. Brama. charya is continence, controlled sex life. Cinemas greatly drag one into this mire and it should be avoided as far as possible, company of women young and old is best restricted, since the social set up of the times is not favourable to this-boys and girls men and women

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

have all to live and work together in each others company every woman has to look upon all men as fathers aud brothers, and every man regard all woman as mothers and sisters. Swami Vivekananda says that if one is established in any one of these virtues the other two will cling on one of its own. To achieve this mental purity, physical purity is essential-external by keeping oneself clean and internal by taking satvic food as far as possiple. Thoughts have to be canalised God-wards: always have sat-sang association with God-fearing men and women.

**Spiritualization of all activities;**

"Momentarily feel that you are an instrument of the Lord"
"நன்றாரி பூட்டிய சூத்திரப்பாவை நன்றார் தப்பினாற்
றன்னாலு மாடிச் சலித்திடுமோ",
"God alone is Brahm Satyam Jagath Mithya",
said Acharya Swamigal.
"காணுங் கண்ணிற் கலந்த கண்ணே உன்னைச் சேணும் யாரும்
திரிபவர் காண்பரோ
ஆணும் பெண்ணும் அதுவெறும் பான்மையும், பூணுங் கோலம்
பொருந்தி உள் நிற்கவே"

"Brahm alone is the sub-stratum of the universe.

Always repeat,
சிந்தைதனை நின்றனக் காக்கி நாயினேன் etc., etc.,

"Constantly and continuously remember : "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரோ...... ஆட்டுகின்றாள் ஆடுகின்றோம். ஆட்டுகின்றான் ஆடுகின்றோம்"

Make every action of yours every word and thoug of yours an offering unto him. அவனன்றி அணுவுமசையாது" He is jagannivasan. சிவா சரணம் சரணம், ஹரே சரணம். Sri Ram Saranam and so on and so forth.


Arjuna says, "my heart is over-powered by the taint of pity: My mind is confused as to duty. I ask thee. Tell me decisively what is good for me. I am thy disciple. Instruct me who has taken refuge in thee" This is Sat Guru Saranagathi Mantra. Gita ChII, V. 7. Memorise this. Abandoning all duties take refuge in me, said Lord Krishna. In the 18th Chapter of the Gita, Veda Vyas speaks through Lord Krishna's mouth "He who has no egoism, whose intellegience is not tainted by good or evil, even if he kills the whole

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

world, he neither kills nor is bound by action'' ''நானெனும் அகந்தை தீர்த்தென் சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே தேஜோ மயானந்தமே''

Remember this for ever: You will live in the Lord and the lord will manifest in you visibly. As you go to bed daily think of all your words, thoughts and deeds and make an offering of these to the Lord. Then and then alone will your heart be purified and ready to receive Divine Grace" says Swami Sivananda.

Therefore practise these three things or even one of them: You'll enjoy a peaee and joy here and now. You will have a joy and happiness infinitely superior to any you ean ever imagine. The study of Scriptures and the practice of Gnana and Raja Yogas are for only a handful with an iron will, razor sharp intellect and true renunciation. Love all, be good, do good under all circumstancss. "May Sivananda guide you and lead you'' is my prayer.



இந்து மாணவர்களின் சமயபாட ஞாயிறு வகுப்பு நடைபெறும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்கல்லூரி இந்துமன்ற இயக்கம்

கடையவனேனைக் கருணையினால்
கலந் தாண்டு கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்
விறல் வேங்கையின் தோல்
உடையவனே மன்னும் உத்தர
கோச மங்கைக் கரசே
சடையவனே தளர்ந்தே னெம்பிரான்
என்னைத் தாங்கிக் கொள்ளே

[மாணிக்கவாசக சுவாமிகள்]

"........இனித்தமுடைய எடுத்த பொற்பாதமுங் காணப் பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இம் மாநிலத்தே"

என்றார் திருநாவுக்கரசு நாயனார். அமரர் பிறவியையும் அணுவளவேனும் வேண்டிலர். இதனால் மனிதப் பிறவி உயர்ந்தது; சிறந்தது; உன்னதமானது என்பது வெளிப்படை சிற்றின்பம் பேரின்பம் இரண்டையும் சீர்தூக்கும் பெருமை மனிதப்பிறவி ஒன்றுக்குமாத்திரமே அமைந்த பெருமையும்; கொடையுமாம். ஓரறிவு தொடக்கம் ஐந்தறிவீறாகவுடைய பிராணிகளுக்கும் இவ் வாய்ப்பமையவில்லை. தேவர்களுக்கும் இக்கொடையருளப்படவில்லை. இதனால் மனிதன் தன் பிறவியின் பொறுப்பை உணர வேண்டியவனாகின்றான். அதை நிறைவேற்றும் ஆற்றலையும் பெற வேண்டியவனாகின்றான்.

"அடக்கம் அமரருள் உய்க்கும்" என்பது அறிவுரை. இதற்கு நமது கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும், மாணவிகளும் சான்றாவர் ஆனால் அதில் தலைசிறந்து நம்மை அல்லும் பகலும் ஊக்குவித்து உயர் நிலைக்கு வழிவகுத்துக் கொண்டிருப்பவர் நமது கல்லூரி அதிபர் திரு. க. சிவபாலன் அவர்கள் என்பதை இக் கன்னியிதழ் அறிக்கையில் அடியேன் தெரிவிக்காவிடின்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற வள்ளுவன் வாக்குக்கமைய வேண்டி வந்துவிடும் ஆரவாரமற்ற அவரின் சமயபக்தி அடக்கமான ஆழமான சமயக்கருத்துக்களை பண்பாடான முறையில் மாணவர்கள் மத்தியில் வளரச் செய்ய வேண்டுமென்பதாம். ஆசிரியர்களாகிய நம்மைப் பல ஆக்கவேலைகளைச் செய்யத் தூண்டுவிக்கும் உள்ளங்கொண்ட நமது அதிபரை இந்து சமய ஆசிரியர்களும் மாணவர்களும் மறப்பது நன்றன்று. பல சமய ஆக்க வேலைகளை நாம் சிந்திப்பதற்கும் செயலாற்றுவதற்கும் இடம், பொருள், ஏவல் இவற்றை எண்ணிப் பின்வாங்க நினைப்பதுண்டு. இறைவன் திருவருளால் யாவையும் இலகுவாக்கி நம்மைச் சிறந்த ஆக்க வேலைகளின் படியிற் கொண்டுபோய் விடும் அவரின் அறிவுத் திறனுக்கு நாம் தலை சாய்த்து நன்றி பகர்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னுர் அதிபராகக் கடமையேற்ருர். அன்றே கல்லூரியின் நேர சூசியில் வெள்ளிக் கிழமைகளில் ஆரம்ப பாடம் ஆலய வழிபாடாக அமைக்கப்பட்டது. கடந்த மூன்று வருடங்களாய் இவ்வழிபாட்டினுல் மாணவர்களும் ஆசிரியர்களும் அடைந்து கொண்டிருக்கும் ஆத்மீகப் பலனை சொற்கள் மூலம் தெரிவிப்பது இயலாததொன்ருகும். இத்தகைய இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களும், மாணவர்களுமே சான்ருவர். பல இந்து ஆசிரியர்களின் அன்பின் பணியாக இவ்வாலய வழிபாடு ஒழுங்காக நடத்தப்படுகின்றது. உள்ளம் உருக மாணவர் மன அலையை அம்பாள் சந்நிதானத்திற்கு இழுத்துஎடுக்கும் தேவார திருவாசக ஓதலும் நாம சங்கீர்த்தனங்களும் ஆசிரியர் திரு. சு. நவரெத்தினம் அவர்களால் நடைபெறுகின்றது. சமயகுரவர், சந்தானகுரவர் குருபூசை தினங்களேயும் ஆலய வழிபாட்டின் போது மாணவர்களே நினைவு கூறச் செய்யும் பணியை இந்து மன்றம் செய்து வருகின்றது.

ஆண்டு தோறும் "சரஸ்வதி பூசையை" அம்பாளின் அருளினுலும் ஆசிரியர்கள் மாணவர்களின் அயரா உழைப்பினுலும் சிறப்பாகவும் பண்பாகவும் கொண்டாடி "சக்தியின் மகிமையை" மாணவர் உணர்ந்துய்யுமாறு பணியாற்றுவது இந்து மன்றத்தின் ஆக்க வேலைகளில் ஒன்ருகும்.

குரைகடல் சூழ்ந்த கோணமாமலை'யில் சிவராத்திரி விழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. அத்தினத்தின் இரண்டாம் ஜாமப் பூசையை நமது கல்லூரியின் இந்து மன்றம் மிகக் சிறப்பாகவும், ஒழுங்காகவும் நடத்தி வருகிறதென்ருல் கல்லூரி ஆசிரியர் மாணவர்களின் உணர்ச்சி இம்மட்டென்பதைச் சொல்ல வேண்டுமோ?

கோணேஸ்வரப் பெருமானின் திருவிழா நடந்து கடைசித் தினம் ஊர்வலமாக எழுந்தருளி அம்பாள் சந்நிதானத்தில் ஈஸ்வரன் மக்கள் வணக்கத்திற்காக அமர்வது வழக்கம். அத்தினத்தில் நமது கல்லூரிக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் மாணவர்களும் ஆசிரியர்களும் சென்று கூட்டுப் பிரார்த்தனை நடத்தி வருகிரேம். இது மட்டுமல்ல: கோணேஸ்வர ஆலய விழாக்களின் போது அதிபர் அவர்களினதும் ஆசிரியர் திரு. வ. தங்கராசா அவர்களினதும் தலைமையிற் பல ஆசிரியர்களும் மாணவர்களும் முகாமமைத்துக்கொண்டு பணியாட்களாய்ச் சென்று சிரமதான முறையில் காடு வெட்டி, கல் உருட்டி, மண் சுமந்து பல வேலைகள் செய்வதை இங்கு நினைவு கூற விரும்புகின்ரேம்.

நமது கல்லூரிக்கருகாமையில் அமைந்துள்ளன அம்பாள் ஆலயம், விநாயகர் ஆலயம், விநாயகர் ஆலய எட்டாந் திருவிழாவை ஆரவார மற்ற முறையில் ஆன்மீக அலைகளை எழுப்பும் தேவார திருவாசகப் பாராயணத்தோடும், கூட்டுப் பிரார்த்தனையோடும் சமயப் பிரசங்கங்களுடனும் சிறப்பாகவும் பண்பாகவும் நடத்தி வருகிரேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதோட்ட நன்நகரில் பாலாவியின் கரைமேல் அமர்ந்துள்ள திருக்கேதீச்சரத்தானின் அலங்காரத்திருவிழாவில் முதல் திருவிழா திருக்கோணமலை இந்து மக்களினதாம். வருங்கால இந்து சமுதாயத்தைப் பரந்த பண்பான நிலையில் உருவாக்கிவிடவேண்டுமென்ற நோக்கத்துடன் நமது கல்லூரியும் பங்கு பற்றியுள்ளது. நாம் திருவிழாச் செலவுக்காகப் பொருள் உதவி அளிப்பதுடன் ஒருசில மாணவர்களும் ஆசிரியர்களும் திருவிழாவுக்குச் சென்று பணியாற்றிச் சிறப்பித்தும்வருவது குறிப்பிடத்தக்கதாம்.

''நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே''

என்பதற்கிணங்க சில மகான்களின் நினைவு விழாக்களைக் கொண்டாடி கல்லூரி மாத்திரமல்ல திருக்கோணமலை மக்களனைவரும் மகான்களின் இலட்சியங்களை அறியவும் உணரவும் செய்யும் வாய்ப்புப் பெற்றவர்களாய் இருக்கின்றோமென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். பகவான் ஸ்ரீ. இராமக்கிருஷ்ண பரமஹம்ச தேவர், அன்னை சாரதாமணி தேவியார், ஸ்ரீமத் சுவாமி விவேகனந்தர் ஆகிய மூவரின் ஜெனன விழாவை ஒன்று சேர்த்து ஒரு தினத்தில் மாபெரும் ஊர்வலத்துடன் ஆரம்பித்து மூவரின் இலட்சிய வாழ்வில் ஊறி உணர்ந்த பல பெரியார்களின் சொற்பொழிவு, கதாப்பிரசங்கங்கள் அடங்கியதாகக் கொண்டாடுவதைக் குறிப்பிட வேண்டியுள்ள அவசியம் ஏற்பட்டு உள்ளது. அன்றியும் சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவைக் கல்லூரி உன்னத நிலையிற் கொண்டாடியதென்பதை நாம் கூறவேண்டியுள்ளது. இவ் விழாக்களின் போது பேச்சுப் போட்டிகளும், கட்டுரைப் போட்டிகளும் நடத்தி வந்துள்ளோம். பொருள் வசதி ஏற்படுங் காலத்தில் திருக்கோணமலை வட்டாரத்திலுள்ள எல்லாப் பாடசாலைகளையுஞ் சேர்த்து போட்டி நடாத்தியுள்ளோம். பொருள் வசதி குறைந்த காலங்களில் நமது கல்லூரி மாணவர்களுக்கிடையிலேயே போட்டியை நடாத்தினோம். இவ்விழாக்களின் போது இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள இராமக்கிருஷ்ண சங்கச் சுவாமியர்கள் பலர் சமூக மீந்தும் ஆசிச்செய்திகள் அனுப்பியும் நம்மை உயர் இலட்சியத்திற்கு அழைத்துச் சென்றனர் என்பதை நன்றியறிதலுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஜூலை 19ந் திகதி நமது கல்லூரியே ஒரு புதுவிதமாகக் காட்சியளிக்கும். தனித்தனி வகுப்பறைகளிலும் ஓர் ஆனந்த நிலை தாண்டவமாடும். ''வெள்ளை நிற மல்லிகையோ.........'' என்ற கீத ஒலி எங்கும் முழங்கும். கல்லூரி ஸ்தாபகராக கல்லூரியின் இன்றைய உயர்நிலைக்கு அல்லும் பகலும் உடல், பொருள், ஆவி ஈந்து உழைத்த ஈழத் துறவியாம் நம் சுவாமி விபுலானந்த அடிகள் அமரத்துவம் எய்தியதினம். அத்தினம் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் போது அடிகளாருடன் இணங்கி உறவாடிய பெரியார்களும், அவரது மாணாக்கர்களாய்இருந்து வந்த பெரியார்களும் உரையாற்றுவார்கள். இவர்கள் அனைவரையும் குறிப்பிட இடமில்லாத போதும் பெரியார் திரு. மா. பீதாம்பரம் (இளைப்பாறிய வித்தியாதரிசி) அவர்கள் நமது கல்லூரிக்கு வந்து அடிகளாரை நம்முடன் இணைத்து விடுவதைக் குறிப்பிடாமலிருக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கோணமலைக்கு எழுந்தருளும் துறவிகளையும், மகான்களையும், பெரியார்களையும் இந்துக் கல்லூரி இந்துமன்றம் அன்புடனும், பணிவுடனும் வரவேற்று அவர்களின் அமுத மொழிகளை அவ்வப்போது அள்ளிப் பருகுவதில் பின் நிற்பதில்லையென்பதைப் பெருமையுடன் கூறுகின்றோம்.

வருடந்தோறும் விவேகானந்த சபையாரால் நடாத்தப்படும் சமய பாடப் பரீட்சைக்குக் கல்லூரியிற் படிக்கும் ஒவ்வொரு மாணவனும் தோற்ற வாய்ப்பளிக்கின்றோம். அப் பரீட்சையிற் பெரும்பாலானமாணவர்கள் சித்தியடைவதுடன் ஒரு சில மாணவர்கள் விசேஷ சித்தியும் பரிசும் பெற்றுள்ளனர். இச்சபையார் நடாத்தும் பேச்சுப் போட்டி கட்டுரைப் போட்டிகளில் மாணவரைப் பங்கு பெறச் செய்கிறோம். மாணவன் ந. கதிர்காமநாதன், மாணவன் சந்திரசேகரம் ஆகியோர் பரிசுகள் பெற்றனர். மாணவன் து. பவராஜா என்பவர் மத்திய பிரிவுக்கான பேச்சுப் போட்டியில் திறமைகாட்டி அச் சங்கத்தாராலளிக்கப் பட்ட வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றோம்.

கல்லூரியில் சமயபாட நேரங்களில் சைவசமய பாடம் படிப்பிக்கப் பட்டாலும் சைவசமய பரந்த நிலையை மாணவர் பூரணமாய்—தூய்மையாய் அறிய வாழ் கையில்பிரயோகிக்க ஆனந்திக்கப்போதிய வாய்ப்பில்லை யென்பதையுணர்ந்த அதிபரும் ஆசிரியர்களும் ஞாயிற்றுக்கிழமைகளில் சைவசமய பாட வகுப்பினை ஆரம்பித்துள்ளனர். திருக்கோணமலை வட்டாரத்திலுள்ள மாணவ மாணவிகள் பலரும் இவ்வகுப்பிற் கலந்து

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

என்ற மேல் நிலையடைய வேண்டும் என்னும் பெருநோக்கத்துடன் இப் பணியானது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதைப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம். இவ் வகுப்பினைச் சிறப்புடன் நடாத்துவதற்குக் கல்லூரி ஆசிரியர்களைத் தவிர வேறு பெரியார்களும் உதவிபுரிய முன்வந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம். இவ்வகுப்பின் மூலமாக நமது கல்லூரி அமைதியுடன் நடத்தும் சமயாசாரியார் சந்தனசாரியார் குருபூசை தினங்களை விமரிசையாகக் கொண்டாடி திருக்கோணமலைச் சைவக் குழந்தைகளின் உள்ளங்களைப் பண்படுத்தும் சமயப் பணியைப் புரிய வேண்டும் என்ற திட்டமுண்டு. திருவருளும் அனைவரின் ஆசியுடன் நம்மவரின் முயற்சியும் ஒன்று கூடி இனிது நடைபெறுமென்ற நம்பிக்கையுண்டு.

சமய விழாக்களின்போது பொருளீந்து ஊக்குவிப்போர் பலர். சகல ஆசிரியர்களும் இப் பெரும் உதவிக்குரித்தானவர்கள். அவர்களனைவருக்கும் நமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம். நெற்றிவியர்வை நிலத்திற் சிந்தி மாணவர்களுக்கு மாணவனாயும் ஆசிரியனாயும் நின்று விழாக்களுக்கான சேட்டை வேலைகளைச் செய்யும் ஆசிரியர் திரு. லெ. திருச்செல்வம் அவர்களுக்கு இந்து மன்றத்தின் நன்றியை மனப்பூர்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகத் தெரிவிக்கின்றோம். இந்து மன்ற இயக்கத்தில் ஊக்கமெடுத்தும் அதன் வரவு செலவைப் பரிசோதித்தும் பலவகையில் உதவியளிக்கும் ஆசிரியர் திரு. சி. புலேந்திரன் அவர்களுக்கும் நமது இந்து மன்றத்தின் உளமார்ந்த நன்றியுரித்தாகுக. எப்பொழுதும் எல்லாச் சமய ஆக்க வேலைகளிலும் மனப் பூர்வமாகத் தம் உயரிய பணிகளைத் தவறுது ஈந்த ஆசிரியர்கள் திரு. க. சிவப்பிரகாசம், திரு இ. கணபதிப்பிள்ளை, திரு. கு. செந்திவேல், திரு. சி. கணபதிப் பிள்ளை, திரு. ந. சிங்காரவேல் ஆகியோருக்கு நமது நன்றியை அன்புடனும், பணிவுடனும் அளிக்கின்றோம். திருமதி. ந. பாலச்சந்திரன் ஆசிரியை அவர்களின் பணியும் உதவியும் நாம் இவ்விடம் ஒவ்வொன்முகக் கூறின் இடம் நேரம் போதாதென் றஞ்சி விடுகின்றோம். அன்னாரின் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்த நாம் அவருக்கு எம் உள்ளங்கனிந்த நன்றியை மிகப் பணிவுடன் ஈகின்றோம்.

கல்விக் கழகங்களின் சமயப் பணியினுற் தான் வருங்கால நாட்டுப் பிரசைகளின் சமாதானம் சாந்தி உண்டென்பதை உணர்ந்தவர்கள் கல்வி அதிகாரிகள் அன்னாருட் தலைசிறந்த சிலருள் நமது கல்வி அதிகாரி திரு. V. சங்கரலிங்கம் அவர்கள் ஒருவர். விருட்சத்தின் ஆணிவேர் நிலத்தினுள் மறைந்து கிடக்கின்றதற்கொப்ப கல்லூரிகளின் சமயப்பணியாகிய விருட்சத்தின் ஆணிவேர் போன்ற அன்னார் அடக்கமாக, ஆழமாக அரும் பெரும் சமய ஆக்க வேலைகளை ஆற்றுவிக்கும் ஆற்றலுடையவர். அப்பெரியார் நமது கல்லூரியின் இந்துமன்ற ஆக்க வேலைகளுக்கு உறுதுணையாய் நின்று அறிவும், ஆசியுமீந்து நன்மை வழி நடத்துகின்றுர் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரினதும் மனப்பூர்வமான நன்றியறிதலை அவருக்களிக்கின்றோம்.

நமது கல்லூரி பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் நாமத்தால் அச்சங்கத்தின் நிர்வாகத்தில் அமையப்பெற்ற பாக்கியம் வாய்ந்தது. அப்பெருமையை ஈட்டித் தருபவர்கள் இராமகிருஷ்ண சங்கச் சுவாமிகள் எனினும் சுவாமி பிரேமாத்மானந்தாஜி, சுவாமி நடராஜானந்தஜி அவர்களை நாம் என்றும் நம் வழிகாட்டிகளாய் பெற்றுள்ளோம். அவர்கள் நமக்கண்மையில் இல்லாவிடினும் அவ்வப்போது வழிகாட்டியாய் குருமாராய் நமக்கமர்ந்து ஆசியும் அறிவும் நல்குகின்றனர் அவர்களுக்கு நமது நன்றியை மிகப் பணிவாய்த் தெரிவிக்கின்றோம்.

நமது இந்து மன்றத்திற்குப் பொருள், பணம் ஈந்தும், அறிவுரைகள் பல புகட்டியும் தம் குழந்தைகள் தம் கல்லூரி என்று அல்லும் பகலும் உழைத்து வரும் பெற்றுர், பெரியார் பலர் இருக்கின்றனர். அவர்களைத் தனித்தனி இயம்ப முடியாதெனவறிந்து விடுகின்றோம். அவர்களனைவருக்கும் நமது நன்றி. நாடகங்கள், நடனங்கள், இசை விருந்துகள், பேச்சுக்கள் கதாப்பிரசங்கங்கள் அளித்து இந்து மன்றத்தின் விழாக்களைச் சிறப்பித்த பல சங்கங்கள் தனிப்பட்டோர், குழந்தைகள் பாடசாலைகள் ஆகியோரை நாம் என்றும் உள்ளத்திற்கொண்டு அவர்களுக்கு நாம் பட்டுள்ள கடமைப் பாட்டை உணர்கிறேம். யாவரினதும் பெயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை நாம் இங்கு குறிப்பிட இடவசதி இல்லாதமை நினைந்து வருந்துகிறோம். அவர்கள் ஒவ்வொருவருக்கும் நமது அன்பான வணக்கத்தையும், நன்றியறிதலையும் தெரிவிக்கின்றோம். இந்நிகழ்ச்சிகளுக்குப் பக்கவாத்தியங்கள் வாசித்தோருக்கும் நமது நன்றி தனித்தனி உரித்தாகுக. மிருதங்கம் வாசிப்பவராகிய திரு S கணபதிப்பிள்ளை அவர்களுக்கும்; வயலின் வாசிப்பவராகிய திரு. வே. தில்லையம்பலம் ஆசிரியர் அவர்கட்கும் நமது நன்றி.

விழாக்களின் நிகழ்ச்சிகளை மறந்துவிடாது நமக்கு முன்பே தோன்றச் செய்வது புகைப்படம். கலைகள் தெய்வீகத்துடன் தொடர்பு படும்போது அது புனிதமும் பெருமையும் சிறந்து உலகில் உன்னத நிலையிற் றிகழ்வது பெரியோர் அனுபவம். புகைப்படம் பிடித்தலிற் தலை சிறந்து விளங்குபவருள் பெருமைக்குரியவர் நமது கல்லூரி பழைய மாணவரும் ஆத்மீக ஈடுபாடுடையவருமான திரு. நா. கணபதிப்பிள்ளையவர்கள். அவரது கலை தெய்விக அம்சத்தால் நிரம்பப் பெற்றது. அதனுல் அவரின் புகைப்படச் சிறப்பு இம் மட்டன்று. கைமாறு எதுவுங் கருதாது, "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற குறிக்கோளுடன் நமது இந்து மன்ற விழாக்களின் போது சிரமத்தையும் மேற்கொள்ளாது அவ்வப போது நிகழ்ச்சிகளிற் பல முக்கிய அம்சங்களைப படம் பிடித்தளிப்பவர் திரு. கணபதிப்பிள்ளை அவர்கள். அவர்களுக்கும் நம் அனைவரினதும் மனமுவந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இம் மன்றம் மாணவர் மன்றமாயினும் கடந்த மூன்று வருடகாலமும் பணியாற்றிய நிர்வாக சபை மாணவர்களையும், ஏனைய இந்துமாணவர்களையும் என்னுல் மறக்க முடியாமலிருக்கின்ற . குழந்தைகளின் கீழ்ப்படிவு, அன்பு, பக்தி நம்மைப் பலவிதத்தில் ஊக்குவித்து அவர்களின் மேற்பார்வையாளர் என்ற நிலையில் அவர்களுடன் அதிகமாக நெருங்கிச் செயலாற்ற சந்தர்ப்பம் ஏற்பட்டது. சிறுவர்களாயினும் வருங்காலப் பிரசைகள் என்னும் பொறுப்புணர்ச்சி படைத்தவர்கள். அவர்கள் தமது இந்து மன்றம் என்ற உணர்ச்சியுடன் ஆக்கிய உயரிய பணிகள் பல. அவர்களின் ஒத்துழைப்பு உயரிய இலட்சியம். அவர்களுக்கு நமது நற்றி.

இந்துக் கல்லூரி இந்து மன்ற ஆக்க வேலைகள் பல உள. இதுவரை ஆற்றியது அற்பமேயாம். "மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் உருவிப் பாயும்" என்பதற்கிணங்க ஆறுதலாகவும் அமைதியாகவும் நல்லோர் வழிகாட்ட இன்னும் பலப்பல உயரிய வேலைகளிலீடுபட்டு இந்து மன்றம் தன் பணியைச் செவ்வனே செய்யத் தங்களனைவரின் அன்பு, ஆசி, அறிவுரை வேண்டி முடிக்கின்றோம்.

வணக்கம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெலாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BUY THE BEST
# BUY IT AT

# BUHARY'S

A large stock of Silks & Sarees
of every description
always in stock

PLEASE PAY A VISIT

*BRANCHES*:

## BUHARY WEAVING CENTRE

TRINCOMALEE


## BUHARY STORES

TRINCOMALEE

*PHONE:* 321


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதானந்தஜீயின் கல்லூரி விஜயம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறை ஓதத் தீவினை தீரும்

தா. சாம்பசிவம்
[ க. பொ. த. இறுதியாண்டு ]

நல்ல சமயமிது நற்றமிழ்ச் செல்வர்களே
கல் நெஞ்சங் கனியக் கடவுளை நினைத்திடுவீர்
வல்லவராய் வாழத் திருமுறைகள் கற்றிடுக
எல்லா மவன் செயலென்றெண்ணி இருந்திடுக.

சீர்காழியிற் பிறந்த சீர் ஞானசம்பந்தன்
தேவாரப் பாசுரத்தை சித்தம் தெளிவதற்கு
நாவார வோதி நற்சுவையிலே மூழ்கிச்
சாவாமல் வாழச் சங்கரனைக் கும்பிடுவீர்.

அப்பனைப் பித்தன் என்றே அழைத்து அவனருளால்
தப்பாமலே சார்ந்த சற்குருவாம் சுந்தரனை
எப்போதும் போற்றி எழிலார் திருமுறையை
முப்போது மோதி மும்மலமு மறுத்திடுக.

அச்சனையே தஞ்சமென்றடைந்த அப்பர் தரும்
மெச்சு மருட் பாட்டில் மேவு மரு மறையை
இப்புவியிலோதி இதயத் தெளிவு வளர்க்க
முப்புரமும் எரித்த முன்னவன் அருள் பெறலாம்.

எக்காலமுந் துன்பச் சிறுநெறியிற் செல்லாது
முக்கண்ணனைப் போற்றி முத்தி நெறி சேர்வதற்கு
தக்காருறைகின்ற தண்பாண்டி நாட்டமைச்சன்
அக்காலம் தந்த திருவாசகத்தை ஓதிடுக.

மண்ணில் பிறந்த மானிடர்களெல்லாரும்
கண்ணிற் கருமணியாங் கடவுள் திருவடியை
பண்ணிற் புனைந்த தமிழ்ப் பாமாலை சூடி நிதம்
அண்ணலருள் பெற்று அழியாது வாழ்ந்திடுக!

---

*70-ம் பக்கத்தின் முதலாவது படம்:*

இமயஜோதி சிதாநந்தா ஜீ இந்துக் கல்லூரிக்கு விஜயம் செய்தபோது அன்னாருக்கு வரவேற்புரை வாசித்து வழங்கும் காட்சி.

*இரண்டாவது படம்:*

ஆ. சிதானந்த ஜீ அவர்கள் அருளுரை ஆற்றும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வையத்தில் இனிது வாழ்ந்து இறையருள் பெற்றேகுவீரே

**சிவயோகச் செல்வன்**
**(தலைவர் இந்து சபை)**

சைவசமயமே சமயம் சமயாதீதப் பரம் பொருளை கைவந்திடவே மன்றுள் வெளிக் காட்டுமிந்த கருத்தை விட்டு பொய் வந்துழலுஞ் சமய நெறி புகுதவேண்டா முத்தி தரும் தெய்வசபையைச் சேரவாருங்கள். இப்பரந்த உலகிலே அரிய பிறவியாகிய மானிடப் பிறப்பை பெற்றுள்ளோம். அரிது அரிது மானிடராதல் அரிது என்ற வாக்கியம் இச் சிறப்பை விளக்குகிறது.

அண்டசஞ் சுவேத சங்களுற் பிச்செஞ் சராயு சத்தோடு
எண்டரு நாலெண்பத்து நான்கு நூறுயிரத்தாய்
உண்டுபல் யோனி எல்லாம் ஒளித்து மானிடத் துதித்தல்
கண்டிடிற் கடலைகையால் நீந்தினன் காரியங் காண்

ஆன்மாக்கள் பலவகையான உடம்புகளை எடுக்கின்றன. இதை பக்தி நெறி நின்ற பைந்தமிழ் அமைச்சர் திருவாசகத்திலே புல்லாகிப்பூண்டாய் என தொடங்கி தன் பிறப்புக்கள் அத்தனையையும் கூறி பொன்னடியை அடைய வைப்பாய் என வேண்டுகிறார். அறிவாளரால் கூறப்பட்ட ஈரேழுலோகத்திலும் கோடிக்கணக்கான பலதரப்பட்ட பிறவிகளுள. அவைகளுள் அரிய இப்பிறப்பை பெற்ற நாம் மேன்மை பெறு சைவத்தை சார்ந்தவர்கள் பிறவியோ அரியது மதமோ சிறந்தது. என்ற மனதுள் நினைத்தால் மட்டும் போதுமா? முன்னவர் கூறியதற்கொப்ப ஒழுகுதல் நன்று.

நின்றும் இருந்தும் கிடந்தும்
என்றும் சிவன்தாள் நினை.

சைவத்திலே முழுமுதற் கடவுளாக சிவனை வணங்குதல் முறையாகும். சிலர் சக்தி வழிபாட்டில் சிரத்தையுள்ளவர்கள். இங்கே சிவன் பெரிதா சக்தி பெரிதா? என்ற கேள்வி எழலாம். நெருப்பிலிருந்து அதனுடன் ஒத்திருக்கும் சூட்டினை பிரித்தெடுக்க யாராலும் இயலுமா? இதே போன்றுதான் சிவமும் சக்தியும். சிவனது தோற்றத்தை ஞானசம்பந்தன் கோண நாயகர் பதிகத்திலே உமையொருபாகம் உடையானை என்று பாசுரத்தில் வர்ணித்தலைக் காணுகின்றோம். சிவமும் சக்தியும் சேர்ந்த வடிவத்தை அர்த்த நாதீஸ்வர வடிவமென்பர்.

எத்தகைய வாழ்க்கையில் நாம் ஈடுபடினும் இறையருள் பெற வேண்டியது அவசியம். அவன் அருள் பெறவேண்டும் ஆகில் திருமுறைகளை ஓதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது நிலை:

தம்பி நீ என்ன மதத்தைச் சேர்ந்தவன் என்று ஒருவர் கேட்கிறார். அந்நேரத்தில் அம்மாணவன் நுதலிலே நீறணிபவன் யாரையா? யான் அப் பெருமதத்தைச் சேர்ந்தவன். பெரியவர் புன்னகை பூத்து நன்று நன்றுதம்பி தேவார திருவாசக திருவிசைப்பா ஆகியஆறையும் முறையே ஓதுவாயா எனக் கேட்கையிலே மாணவனின் உண்மை நிலை தெரிகிறது. கேட்ட பெரியவரோ வேறு சமயத்தவர். இந் நிலையில் எமது மதத்தின் நிலை, இறை அன்பு, எவ்வளவில் இவ்விருபதாம் நூற்றுண்டில் உண்டென்பது தெளிவாகின்றது. ஒருவேளை பட்டம் பலபெற்று இவ்வையத்தின் இனிது வாழ்ந்து செல்லலாம் எனவள் புகழை பாட வேண்டும். எவ்வளவு பெரிய பட்டப்படி பை பெற்றுலும் இறைவனை நினைப்பதவசியம்.

கற்றதனுல் ஆய பயனென் கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்

என்பது தெய்வப்புலவரின் வாக்கு இறைவனின் செங்கமலப்பாதத்தை நாடவேண்டுமாயின் உதாரணமாக பட்டத்தைச் சர்வகலசாலையில் பெறவேண்டுமாயின் பட்டப்படிப்பை இடைவிடாது கற்கவேண்டும் அதேபோன்று இறைவனை அடையவேண்டுமாயின் இடையருது சாதனை செய்தல் வேண்டும்.

சிவனேயச் செல்வர்களே! ஒரு கணம் சிந்தியுங்கள் ஐயிரண்டு திங்களாக அங்கமெல்லாம் நொந்து பெற்ற எமது அன்னை துன்பக் கடலில் மூழ்கின் அதைப்பார்த்து சகிக்க முடியுமா? வட்டிலிலும் தொட்டிலிலும் மார் மேலும் தோள்மேலும் கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்த அன்னை தனை போற்றுவதெப்படியோ அப்படியே செப்பமுறத் தமிழை ஓதும் சைவச் சிறுர்களாகிய நாம் அவ் அப்பனையும் மதத்தையும் போற்ற வேண்டும். அன்னை அவள் வையத்தில் இனிதுவாழ்ந்து நிமலனடிசேரும் நேரத்தில் ஆத்ம சாந்திக்கு மகனே ஒரு பாசுரம் பாடு என்று கேட்கையில் இறைவன் மீது புகழ் பாடாமல் தற்போது புகழ் பெறும் திரைப் பாடல்களை ஓதக் கூடிய நிலையிலே எமது சைவச் சிறுர்கள் உள்ளனர். இந்நிலை மாறவேண்டும். நாம் செந்தமிழ் செல்வர்களாக பிறந்து எமதன்னைக்கு உரிய கடனை முடிக்காவிடில் நாம் நன்றியற்ற பிறவியர்களாகின்றேமல்லவா இதேபோன்று எமைப்படைத்த இறைவனை வணங்காவிடில் நன்றியுள்ளவர்களா? வையத்தில் வாழ்வாங்கு வாழ்பவர் தெய்வத்துள் வைக்கப்படுமன்றே. பொருள் நிறைய வைத்திருக்கும் நேரத்தில் உமது சுற்றம் உமைத்தேடி வருவதுண்மை. அவை இல்லாதொழின் உமதருகிலும் வரமாட்டார். நீ, இறப்பாய் ஆயினும் சுடலைமட்டே வந்திடுவர் தவத்தால் பெற்ற தவச்செல்வனும் சுடலைமட்டே.அப்பர்சுவாமிகள் தேவாரத்தில்

எத்தாயர் எத்தந்தை எச் சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவநல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒருவரில்லை.
சிறு விறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாய வேடத்தாய் நீடு பொன்னி
திருவானைக் காவுடைய செல்வா உந்தன்
அத்தா உன் பொற்பாதம் அடையப்பெற்றால்
அல்லல் கொண்டடியேன் என் செய்கேனே

வையத்தில் இனிது வாழ்ந்து செல்கையில் இறை அருளும் நாம் செய்யிருவினையுமே நம்மோடு வரப்பெறும் திரு வெண்காடர் சிறப்புற

அத்தமும் வாழ்வும் அகத்து மட்டே விழியம் பொழிக
மெத்திய மாதரும் வீதி மட்டே விம்மி விம்மி இரு
கைத்தலமேல் அழுமைந்தருஞ் சுடுகாடுமட்டே
பற்றித் தொடரும் இருவினையும் புண்ணிய பாவமுமே.

அருள் நெறிச் செல்வர்களே இறைவனையே தஞ்சமென்று வையத்தில் இனிது வாழ வேண்டும். அவனிடமே நமது துன்பங்களை இயம்பி காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வேண்டும் பால் நினைந்தூட்டும் எம் பெருமானை விடமுண்ட கண்டனை பாற்கடலீந்த பிரானை விடையேறும் ஈசனை போற்றித் துதிக்கவேண்டும். அம்மையும் அப்பனும் அவனே, மாமனும் மாமியும் அவனே. யாவும் அப் பரம் பொருளே. இதற்கு அப்பர் சுவாமிகள் தேவாரப் பாசுரத்தில்

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடை னல்லன் ஒருரன் அல்லன்
ருவமலிவ் வி இப்படியும் இன்நிறமும் இவ்வண்ணமும்

எனவரும் அப்பரின் கூற்றுக்கொப்ப இறைவனை நினைந்து அவனை நாட வேண்டும். அவன் பேரை நினைப்பதற்காய் பஞ்சாட்சர மந்திரத்தை ஒதுவதவசியம். சிவசின்னம் ஆகிய திரு நீற்றினை தரிக்கவேண்டும் இத னால் எமதுள்ளப் பிணிகள் யாவும தீரும். இதற்கு கூன்பாண்டியனுடைய வரலாறு சான்று பகறுகின்றது. நீறில்லா நெற்றிபாழ் என்பது பெரியோர் வாக்கு. சிவாய நமவென்று நீறணிந்து சிவ கெதியடைய வேண்டும்.

உரைக்கைக்கு நல்திருவைந் தெழத்துண்டுரைப்படியே
செரிக்கித்தரிக்க திரு நீறுமுண்டு தெருக்குப் பையில்
தரிக கரித்துணியாடையும் உண்டென் தச்சாதியிலும்
இரங்கத் துணிந்து விட்டேன் குறையேது மெனக்கில்லையே
(திருவெண்காடர்)

இப்பாடலைக் கண்டவுடன் நம் உள்ளத்தில் அறம் செய்ய விரும்பு என்ற ஔவையின் வாக்குத் தென்படும். ஆத்மப்பசியை தீர்ப்பதற்கு அவன்தாளையே நாடவேண்டும் வயிற்றுப்பசியை தீர்ப்பதற்கு நம் தாயை நாடவேண்டும். தென்னவன் நமதுயிரை எடுத்திடும்போது சிவனருள் பெறவேண்டுமென்பதற்கு மார்க்கண்டேயனுடைய கதைசான்று பகருகிறது. காலன் எனையணு காமலுனை திரு காலில் வழிபடு அருள் வாயே எனத் திருப்புகழ் உரைக்கிறது. பட்டினத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே — மேல் விழுந்து
உற்றார் அழுமுன்னே ஊரார் அழுமுன்னே
குற்றாலத்தானேயே கூறு.

என்பது அவர் வாக்கு குற்றலத்தானை ஒரு நாளைக்கு அரைநிமிட நேர
மேனும் நினைவு கூறவேண்டும். திருப்புகழில்

சரண கமலாலயத்தை அரைநிமிட நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க அறியாத
சகட கட மூடமட்டி என அழகுறக் கூறுகிறார்.

வையத்தில் எத்தகைய இன்ப வாழ்க்கையில் இனிது வாழ்ந்தாலும்
சைவர்களாகிய நாம் ஜோதியே வடிவானவனை ஆதியும் அந்தமுமில்
லாதவனை நாடல் வேண்டும்.

சைவப் பெருமக்களே நெஞ்சினுள் நினைந்து உருகுவாயாக.
இதற்கு

நெஞ்சே நீ நினையாய்
நிமில் புஞ்சடை நிர்மலனை
மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்' (அப்பர்)

எனவரும் அப்பர் பாசுரத்திற்கொப்ப அவனை வணங்க வேண்டும், எமக்கு
எவ்விடர் வந்தினும் நாம் பெற்ற சிவனருள் தக்க காலத்தில் தடுத் ாழ்
வது நிச்சயம். இதை ஒவ்வொரு சைவனும் மனதில் கொள்ள வேண்
டும். இதற்கு நம்பியாரூரர் வரலாறும அருணகிரிநாதர் வரலாறும்
சாட்சி பகருகிறது. சிற்றின்ப வாழ்விலே ஊறித்திழைத்த அருணகிரி
நாதர் தமது பிழை உணர்ந்து கோயில் கோபுரத்தின் உச்சியிலிருந்து
வீழ்கின்ற நேரத்தில் கந்தந்தவேள் தடுத்தாட்கொண்டான் அன்றுதான்
முத்தைத் திருபததித் திருநகை என திருப்புகழை பாட ஆரம்பித்
தான்.

சைவப் பெருந்தகையிர் இறைவனை அடைய வணங்குவதோடல்
லாது. அறவாழ்க்கையும் மேற்கொள்ள வேண்டும். தானம் செய்யம்
வழக்கம் ஒவ்வொரு சைவர்களாகிய எமதில்லங்களில் நடைபெற வேண்
டும். இவ்விருபதாம் நூற்றாண்டில் ருசிகொண்ட உணவுதனை புசிக்கின்ற
நேரத்தில் பசிக்குதையா என்றொருவர் வந்தால் அட சீ போ என்ற
வார்த்தையுடன் நேரம் பன்னிரண்டு என்று கூறுவர் இன்னுனில் இந்நிலை
மாறவேண்டும் ஈயும் தன்மை எம்மிடையே மிளிருமானால் இறையருள்
பெறுவது சுலபமாகிவிடும். ஈயாதவர்களை நோக்கிய திருவெண்காடர்

நாயாய்ப் பிறந்திடினும் நல்வேட்டையாடி நயம் புரியுந்
தாயார் வயிற்றினராய் பிறந்து பின் சம்பன்னராய்
காயாமரமும் வறலாங்குளமும் கல்லாவுமென்ன
ஈயாமனிதரை ஏன்படைத்தாய் கட்சியேகப்பனே

தருமத்தோடு பிறவுயிர்களின் மேல் அன்பாக இருப்பது சைவர்க
ளாகிய எமது பண்பாடாகும். அன்பாக இருப்பின் சிவத்தை வணங்குதற்
குச் சமன் இதை திருமந்திரத்திலே திருமூலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்திலர்
அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே

இடையருது இறைவனை நினைத்த ஒரடியவன் இக்கட்டான நிலையில் இருக்கின்ற நேரத்தில் இறைவனைப் பார்த்து ஆ கண்கெட்ட கடவுளே என்று திட்டும் அவ்வடியவன் ஒரு நாழிகை கழிந்துஅவன் கண் சந்தோஷ நிகழ்ச்சி நிகழ்கையில் ஆயிரம் கண்ணுள்ள தேவி என்று புகழ் பாடுவான் துன்பம்வரின் தொடர்ந்து துன்பமும் இன்பம்வரின் அதைத்தொடர்ந்து பல இன்பமும் வருவது நியதி. நாமிப்பிறப்பில் அடையும் துன்பத்திற்குக் காரணம் முன் செய்த தீவினையே என் செயலாவது யாதொன்றுமில்லை இனித் தெய்வமே எனத் தொடங்கி முன் செய்த தீவினையே இங்கனம் வந்து சூழ்ந்ததுவே என பட்டினத்தார் உரைக்கிறார். இறைவனை நினைக்காத மானிடனை எதற்காகப் படைத்தாய் என இறைவனையே நோகின்றார் பட்டினத்தார் தேவையற்ற சண்டை செய்து கோடுகளில் ஏறி நின்று தீயவைகள் புரிகின்ற மனிதன் ஏனிவ்வையத்தில் பிறக்க வேண்டும்.

வாதுக்குச் சண்டைக்குப் போவார்
வழக்குரைப்பார் தீயவைகள் புரிவதற்கு
தினம் தேடிச் சென்றிடுவர்
மாதுக்களந்து மயக்கிடுவர் விதிமாளுமட்டும்

ஏதுக்கிவர் பிறந்தார் என்று கேட்பதுவும் பொய்யாமோ? இறைவனை பாடித்துதிக்க தக்க பாக்கள் இருக்கின்ற நேரத்தில் பயனற்ற பாக்களை நாவால் சுவைகொள்ளல் முறையோ இறையருள் பெற இது தகுமா உதாரணமாக தற்போது எமது ஆலயங்களில் பாடப்படும் பாட்டுக்கள் இதுவா.

காதலிக்க நேரமில்லை காதலிப்பார் யாருமில்லை
வாலிபத்தில் காதலிக்க ஜாதகத்தில் வழியுமில்லை

இதன் உட்கருத்தென்ன. இறைவா உன்மீது அன்பு செலுத்த நேரமில்லையப்பா அன்பு செலுத்தக் கூடியவரும் இவ்விருபதாம் நூற்றாண்டிலில்லை. அதுவும் இவ்விளமைப் பருவத்தில் அன்பு செலுத்த எமது உளமே விடுகுதில்லை. இத்தனைக்கும் செயல்படுகின்ற மாணவன் எப்படி இன்ப வாழ்க்கையை அனுபவித்தாலும் இவ்வையத்திலிருந்து நமதுஉயிராகிய சிவப் பிரிகின்ற நேரத்தில் அச்சிவத்தை நினைக்கவேண்டும் மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கவேண்டும். வையத்தில் இனிது வாழ்ந்து இறையருள் பெற்றேகுவோமாக.

''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவனும் சமயப் பணியும்

சி. என். மகேந்திரன் (க. பொ த. இறுதியாண்டு)

உலகில் உயரிய பணியான சமயப் பணியை விருத்தி செய்வதற்கு பல பெரியார்கள் அன்றுதொட்டு இன்றுவரை உழைத்து வருகின்றார்கள். சமயப் பணியில் பல பெரியார்கள் தங்கள் உயிரையே அர்ப்பணித்து உள்ளார்கள். இப்படியாக தங்களுடைய உயரிய கடமையாக இறைவனுடைய பணியை இவர்கள் திறம்படச் செய்து நாட்டு மக்களையும் இப்பணியில் ஈடுபட்டுழைக்கும் விதங்களையும் முறையையும் எடுத்து உரைத்ததுமின்றி, செயலில் செய்துகாட்டி மற்றவர்களையும் இப்பணியில் கவரச்செய்துள்ளனர். இதே போன்று சமயப் பெரியார்கள் செய்த இப் பணியை மாணவர்கள் ஏன்செய்தல் கூடாது.

கல்வி கற்கும் பணியைக் குறிக்கோளாகக் கொண்ட மாணவ மணிகள் வாழ்க்கையில் ஒழுக்க நெறி குன்றாமல் வாழ்வதற்கு சமயப் பணியை சிரமேற் கொண்டு செய்தல் நன்றாகும். இந்து மாணவர்களானாலும் சரி, கிறிஸ்தவ மாணவர்களானாலும் சரி, இஸ்லாம் மத மாணவர்களானாலும், வேறு எந்த சமயத்தைச் சார்ந்த மாணவர்களானாலும் சமயப் பணியைச் செய்ய பழகிக் கொள்ள வேண்டும். நாம் என்று இவ்வுலகில் தோன்றினோமோ அன்று தொட்டு இறக்கும் வரை எம்முடன் கூட வருவது எமது ஒழுக்க நெறியாகும். இந்த ஒழுக்க நெறியை உருவாக்கியது சமயப் பணி என்பதை மாணவர்கள் மறந்துவிடல் கூடாது.

எமது ஈழநாட்டில் சமயப்பணிக்காக உழைத்து வந்த பல பெரியார்கள் உளர். அதுவும் இருபதாம் நூற்றாண்டில் என்றால் ஈழம் பெற்றெடுத்த சமயத் தொண்டன் சைவ சிகாமணி சேர் கந்தையா வைத்தியநாதனே ஆவார். இவர் சிறு வயதிலேயே சமயத்தொண்டு செய்வதில் மேம்பாடுடையவராகத் திகழ்ந்தார். அவரைப் போன்று பல பெரியார்கள் சமயப் பணியில் தீவிர பங்கு கொண்டு உழைத்து வருகின்றார்கள். இப்பெரியாரின் பணியை எல்லோரும் ஓர் குறிக்கோளாகக் கொண்டுவருதல் வேண்டும்.

மாணவர்கள் இப்படிப்பட்ட சமயப் பெரியார்களின் வாழ்க்கையைக் கைக்கொண்டு பணியைத் தொடர வேண்டும். சமயப்பற்று, தெய்வ நம்பிக்கை, குரு, பெற்றோர் ஆகியோரின் நல்லாசி பெற்று உயர்ந்த நோக்குள்ளவர்களாக விளங்க வேண்டும். இவைகளே ஒரு மாணவன் முதல் அறிந்திருக்கவேண்டிய உயர்ந்த இலட்சியங்களாகும். எந்த ஒரு மாணவனும் கல்வி கற்காவிடினும் பரவாயில்லை ஆனால் அவனை ஓர் உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்லக்கூடியது சமயப் பணியாகும். மேற்கூறியவைகளே அவனுக்கு கல்வி விருத்தி அடைவதற்குரிய அறிவுரைகளாகும்.

சமயப்பணி ஏன் செய்தல் வேண்டும் என்று சில மாணவர்களின் இதயத்தில் கேள்விகள் எழலாம். நாம் இப்பணியை செய்வதால் எம்மிடம் இருக்கும் அகங்காரம், ஆணவம் மற்றும் அவற்றினால் ஏற்படும் கெடுதல்களுக்கு இடம் இருக்கா, அவைகள் எம்மில் இருந்தாலும் இலகுவில் நீங்கிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


போகும். இல்லையேல் எம்மைத் தாவிப் பிடித்துக்கொள்ளும். இலகுவில்
எம்மை விட்டுப் போகாது. இதனால் எமது கடமைகளைச்செய்தல் இயலாது.
சமயம் ஒருவனுடைய தீய குணங்களை அகற்றக்கூடிய வழிவகைகளை
உடைய ஒரு தெய்வத்தன்மை பொருந்தியதாகும். தீய எண்ணம், தீய செயல்
தீய சிந்தனைகளை அகற்றி இறைவன் மேல் அவனுடைய அன்பைத் திருப்ப
உதவியாயிருப்பது சமயமாகும். சமயப் பணி ஒற்றுமையான முறையில்
பெரியவர்களானாலும், சிறியவர்களானாலும், வறியவர்களானாலும், செல்வர்க
ளானாலும் சமய தத்துவங்களை எடுத்துரைத்து ஒதுவார்வரும் தமது சமயப்
பணியை மேலானதெனக் கருதி பல பேரவைகள், விவாத மன்றங்கள், சம
யக் கழகங்கள் முதலியன எல்லா நாட்டிலும் நிறுவி சமயப் பணிக்காக
உழைக்க வேண்டும். இந்தியா போன்ற சமய வளர்ச்சியில் ஓரளவு அக்
கறை கொண்ட நாடுகளில் எல்லாம் பலர் சமயப் பணிக்கென ஆச்சிரமங்க
ளும் கோவில்களும், மடங்களும் கட்டியுள்ளனர். ஆனால் அதே போன்று
ஈழநாட்டிலும் இப்பொழுது சமய வளர்ச்சிக்கென பல பேரவைகள் ஆரம்ப
மாகி சமயப் பணியை செய்து வருகின்றன.

ஈழ நாட்டில் அரசாண்ட பண்டைய மன்னர்களும், சிற்றரசர்களும்,
புலவர்களும் சமயத் தொண்டு செய்து வந்துள்ளார்கள். அவர்கள் சமயத்
தொண்டில் எவ்வளவு சிரத்தை உள்ளவர்கள் என்பதை இப்பொழுதுள்ள
பண்டைய இலக்கிய வரலாற்று நூல்களிலும், ஆதிகால கல்வெட்டுகளிலும்
பண்டைய அரசர்கள் வைத்து வணங்கிய தெய்வங்களின் சிலைகளிலும் நாம்
இப்பொழுது பார்த்து அறியக்கூடியதாயிருக்கின்றது என்பது வெளிப்படை
யாகும்.

இத்தகைய பண்டைய இனத்தவர்களின் பணியைக்கூடி மாணவர்கள்
அறிந்திருத்தல் வேண்டும். இப்படியாகப் பல விடயங்களை அறிந்தும் நாம்
ஏன் சமயப் பணியை செவ்வனே செய்ய பின்நிற்கிறோம் என விளங்கவில்லை.
இதற்கு முக்கிய காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஒன்று தாழ்வு
மனப்பான்மையாக இருக்கலாம். இல்லையேல் அசட்டுத் தன்மையாக விளங்க
லாம். அல்லது கட்சி பாகுபாட்டின் கொள்கைகளில் பின்னப்பட்டு இருக்க
லாம். எந்தக் கொள்கை ரீதியான கட்சிகள் என்றாலும் அவைகளை இயக்கு
வதற்கு ஏதாவது ஒரு சக்தி இருந்தே தீரும்.


ஆகவே மாணவர்கள் தங்கள் இளமைப் பிராயத்தை தீமையான
பாழான நாகரீக வாழ்வில் செல்லவிடாது தூய்மையான இறைவனுடைய சம
யப் பணியில் ஊறித்திளைக்க ஆயத்தமாக இருக்கவேண்டும். இவைகளே
ஒருவனுக்குத் தேவையாகும். தீமையான தேவையற்ற வேலைகளில் ஈடு
படும் நேரத்தில் சமயப் பணியில் கழிப்பது மிக மிக நல்ல ஓர் திட்டம் என்பதில்
ஐயமில்லை.

ஓங்குக இளம் உள்ளங்களின் சமயப்பணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக் கல்லூரியில் சரஸ்வதி பூஜை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முதலாவது படம்: சிவ ஸ்ரீ சிவசுப்ரமணியக் குருக்கள்
சரஸ்வதி பூஜை செய்யுங் காட்சி.

இரண்டாவது படம்: திரு. சிவ அன்பு கதாப்பிரசங்கம் செய்யும் காட்சி.

மூன்றாவது படம்: செல்வி சியாமளா வாம தேவன் நடனமாடும் காட்சி.

உள்ளக் கமலத்தை உலகுக்கு நிழற்படமாக்கித் தந்தவர்
**திரு. நா. கணபதிப்பிள்ளை அவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org